

# திருப்பூர் மாநகராட்சி

## வரவு செலவு திட்டம்

## 2026 – 2027





முத்தமிழறிஞர்

டாக்டர். கலைஞர் அவர்கள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்



மாண்புமிகு துணை முதலமைச்சர்

**திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்**



மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்

**திரு.கே.என்.நேரு அவர்கள்**



**ந.தினேஷ்குமார் M.I.B.,**
**மேயர்,**
**திருப்பூர் மாமன்றம்**

## முகவுரை

**காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்.**

(குறள் எண்:386)
–திருவள்ளுவர்

குறள் விளக்கம் : காட்சிக்கு எளிமையும் கடுஞ்சொல் கூறாத இனிய பண்பாடும் உடைய அரசை தான் உலகம் புகழும் என்ற குரலுக்கு ஏற்ப,

திராவிட சித்தாந்தத்தின் தீந்தமிழ் கொடையே மக்கள் மனதில் மங்காத ஒளியே திசைகள் அதிர வெற்றிகள் குவித்த சூரியச்சுடரே ! தமிழகத்தின் முதல்வரே ! எங்கள் தளபதியே கொள்கையால் கோட்டையை வென்றவரே ஏழாவது முறையாக கலைஞர் ஆட்சி அமைக்கவிருக்கும் தளபதியாரே !

ஐந்தாண்டு கால நல்லாட்சியில் திருப்பூர் மாநகராட்சி முதன்மை மாநகராட்சி ஆக்கிட திறமையும் வளமையும் மிக்க திறன்மிகு சீர்மிகு நகரமாக மாற்றிட கருத்துரைகள் வழங்கியும் , வழிநடத்தியும் , ஆக்கமும் ஊக்கமும் ஏற்படுத்தி, திருப்பூர் மாநகராட்சியின் மேயராக எனக்கு பொறுப்பு வழங்கி ஊக்கப்படுத்தும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின்** அவர்களின் நல்லாசியோடு 2026–27 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையினை திருப்பூர் மாநகராட்சியின் வளர்ச்சி குறிக்கோளுடன் கூடிய நிதி நிலை அறிக்கையை ஐந்தாம் முறையாக சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையம் அருகில் சுமார் 1.82 ஏக்கரில் ரூ.3.10 கோடி மதிப்பீட்டில் 2178 பரப்பளவில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய முதல்வர் படிப்பக கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

TURIP 2025-26 ( பகுதி 1 மற்றும் பகுதி 2 ) SFC 2025-26 Special fund 2025-26, 15th CFC 2025-26 -ன் கீழ் 2569 எண்ணிக்கையிலான சாலைகள் 316.93 கி.மீ. நீளத்திற்கு ரூ.197.68 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

மாநகரில் உள்ள அனைத்து மண் சாலைகளும் தார் சாலைகளாக மாற்றியமைக்கப்படும் மற்றும் பல்வேறு பகுதிகளில் சேதமடைந்துள்ள சாலைகளை (**Patch – Pot holes**) முழுவதும் சீரமைக்கப்படும்

பெருமாநல்லூர் நெடுஞ்சாலைத்துறை சாலை மும்மூர்த்தி நகர் கிழக்கு டீச்சர்ஸ் காலனி முதல் எஸ்.டி.கம்பெனி சாலை வழியாக போயம்பாளையம் பகுதியை இணைக்கும் சுமார் 250 மீட்டர் தொலைவிலான சாலை இணைப்பு பணிகள் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

பிச்சம்பாளையம் லட்சுமி நகர் முதல் புதியதாக கட்டப்பட்டு வரும் நல்லாறு உயர்மட்ட மேம்பாலம் மற்றும் ராஜா நகர் வழியாக பெருமாநல்லூர் நெடுஞ்சாலையினை இணைக்கும் சுமார் 330 மீட்டர் தொலைவிலான சாலை இணைப்பு பணிகள் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

பெருமாநல்லூர் நெடுஞ்சாலைத்துறை சாலையில் இருந்து மும்மூர்த்தி நகர் மேற்கு மற்றும் சுகம் கிளப் வழியாக பூண்டி ரிங்ரோடு நெடுஞ்சாலைத்துறை சாலை வரையில் சுமார் 1100 மீட்டர் தொலைவிலான இணைப்பு சாலைகள் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

பல்வேறு தாழ்வான பகுதிகளில் மழைநீர் வடிகால்கள் புதிதாக அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆண்டிபாளையம் திருப்பூர் குமரன் கல்லூரி (S.R.Nagar) பவானி நகர் ஆகிய இடங்களில் நொய்யல் ஆற்றின் குறுக்கே உயர் மட்டப் பாலங்கள் அமைக்கப்படும்.

திருப்பூர் மாநகரத்தில் தொழில் வளர்ச்சிக்கும், மற்றும் போக்குவரத்து நெரிசல் குறைப்பதற்கும், கல்லூரி சாலையினையும், ஜெய்வாபாய் பெண்கள் மேல்நிலைப் பள்ளி சாலையினையும் இணைக்கும் வகையில் ஒரு இரயில்வே மேம்பாலமும் அமைக்கப்படும்.

திருப்பூர் மாநகராட்சிப் பகுதிகளில் சாத்தியக் கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு, மேலும் 7 இடங்களில் புதிதாக இரயில்வே கீழ்ப்பாலங்கள் அமைக்கப்படும்.

நிலுவையிலுள்ள தாய்மூகாம்பிகை நகர் மேல்நிலைத் தொட்டி கட்டுமானப் பணிகள் இந்நிதியாண்டிற்குள் துவங்கப்பட்டு விரைந்து கட்டி முடிக்கப்படும்.

15வது மத்திய நிதிக்குழு மானியம் [15th CFC 2021-22 & 2022-23-ன் கீழ் விடுபட்ட பகுதிகளுக்கு குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் ரூ.48.01 கோடி மதிப்பீட்டில் 380.324 கி.மீ நீளத்திற்கு குடிநீர் விநியோகக் குழாய்கள் பதித்தல் பணி நடைபெற்று வருகின்றன.

பாதாள சாக்கடை அமைப்பு இதுவரை இல்லாத 10,41,47,53, 54,57,58,59 மற்றும் 60 ஆகிய வார்டுகள் மற்றும் ஏற்கனவே பாதாள சாக்கடை அமைப்பு உள்ள வார்டுகளில் விடுபட்ட பகுதிகளுக்கும் பாதாள சாக்கடை அமைக்க சாத்தியக் கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு படிப்படியாக இனிவரும் ஆண்டுகளில் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாநகராட்சியில் உள்ள மொத்தம் 60 வார்டுகளில் தற்போது 52 வார்டுகளில் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் நகர் நல மையங்கள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள 8 வார்டுகளிலும் சுகாதார நிலையம் மற்றும் நகர் நல மையங்கள் அமைக்கப்படும்.

வீடுகளிலேயே 100% குப்பைகளைத் தரம் பிரித்து வழங்கும் முறையை வலுப்படுத்தி, அடுத்த சில மாதங்களில் சாலையின் ஓரங்களில் உள்ள குப்பைத் தொட்டிகளை முழுமையாக அகற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதுசமயம் 70000 குடியிருப்புகளுக்கு தரம் பிரித்து சேகரிக்க இருவண்ண குப்பை தொட்டிகள் வழங்கப்பட்டது. மேலும் அனைத்து குடியிருப்புகளுக்கு வழங்க வழிவகை செய்யப்பட உள்ளது.

திருப்பூர் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு இடுவாயில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்காலிக திடக்கழிவு மேலாண்மை சேமிப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. த்தும், மக்கும் கழிவுகளை செயலாக்கத்திற்கு கூடுதலாக 12 அரவை இயந்திரங்கள் வாங்கப்படும். பழைய கழிவுகளை மேலாண்மை செய்ய இயந்திரங்கள்

நிறுவப்படும்.. உயிரி எரிவாயு ஆலை நிறுவப்படும். கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்க கூடுதல் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் சேகரமாகும் பழைய தொலைக்காட்சிகள் மற்றும் தொலைபேசிகள் போன்ற மின்னணு கழிவுகளை சேகரிக்க வாராந்திர முகாம்கள் நடத்தப்படும்.

மாநகராட்சிப் பகுதிகளில் உற்பத்தியாகும் கட்டுமானக் கழிவுகள் மற்றும் இடிபாடுகளைச் சேகரிக்க தனி இடம் ஒதுக்கீடு செய்யப்படும்.

மாநகராட்சி பிரதான சாலைகளிலுள்ள ரவுண்டானாக்கள் மற்றும் மையத்தடுப்புக்கள் சமூக தன்னார்வளர்களின் நிதி உதவியுடன் மரக்கன்றுகள் நடும் பணிகளும் செய்யப்படும். இது திருப்பூர் மாநகரத்தை பசுமை மாநகரமாக மாற்ற வழி வகுக்கும்

வரும் நிதியாண்டில் மாநகராட்சிப் பள்ளிகளில் தேவைகளுக்கேற்ப கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் அமைக்கப்படும்.

. திருப்பூர் மாநகரத்தில் வடக்கு பகுதியில் பெண்கள் கல்வி கற்க வசதியாக ஜெய்வாபாய் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நிகராக 2026-27 ஆம் கல்வி ஆண்டில் புதிதாக பெண்கள் மேல்நிலைப்பள்ளி அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திருப்பூர் வடக்கு மாநகரப் பகுதியில் ஆம்னி பேருந்துகளுக்காக தனி புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. விரைவில் புதிய ஆம்னி பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

50 இடங்களில் புதிதாக ஸ்மார்ட் பொதுக் கழிப்பறைகள் அமைக்கப்படும். மேலும் பெண்களுக்கென பிரத்யேகமான பிங்க் கழிப்பறைகள் ( Pink Toilets) அமைக்கப்படும்.

இந்த நிதி ஆண்டில் பேருந்து நிலையம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நடராஜ் தியேட்டர் சாலை, சக்தி தியேட்டர் சாலை பகுதியில் உள்ள ரவுண்டானாக்கள் அழகுபடுத்தப்படும்.

நொய்யல் ஆற்றில் கழிவுநீர் கலப்பதை தடுக்க இடைமறிப்பு ( Interceptor) வடிகால்கள் கட்டப்படும். சங்கிலிப் பள்ளம் மற்றும் ஜம்மனை ஓடை

ஆக்கிரமிப்புகளை அகற்றி ஓடையின் கரைகளை பலப்படுத்தி புணரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

நல்லாற்றங்கரையிலும் நொய்யல் ஆற்றில் மேற்கொண்டதைப் போல கரைகளில் தடுப்புச் சுவர் மற்றும் தார்சாலைகள் அமைக்க சாத்தியக் கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

திருப்பூர் மாநகராட்சி நொய்யல் ஆற்றின் இரு கரைகளிலும் தடுப்பு சுவர் மற்றும் தார்சாலைகளுக்கு இடையே உள்ள பகுதியில் பொது மக்கள் பயன்பெறும் வகையில் பூங்காக்கள், 8 கி.மீ. தூரத்திற்கு பிரத்யேக மிதிவண்டிப் பாதைகளுடன் கூடிய சாலைகள் மற்றும் நடைபாதைகள் அமைக்க கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் முடிவுறும் பட்சத்தில் அப்பகுதியில் உள்ள பொது மக்கள் உடற்பயிற்சி மற்றும் நடைபயிற்சி மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வார்டு சபாவில் தேர்ந்தெடுக்கப்படும் பணிகளுக்கு மீண்டும் இந்நிதியாண்டில் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு முதல்வரின் எண்ணத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு வரும் அமர்ஜோதி கார்டன் பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய கால்பந்து விளையாட்டு மைதானம் அமைக்கப்படும்.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் வரும் நிதியாண்டில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் எடுக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

தனியார் நிறுவனங்களின் சமூக பங்களிப்பு நிதியின் மூலம் மிடுக்கான வகுப்பறைகள், பிரதான சாலைகளில் நுழைவு வாயில் வரவேற்பு குறியீடுகள் (VMD– Variable Message Display), சூரிய மின்விளக்குகள், மழைநீர் சேகரிப்பு, மறுசுழற்சி இயந்திரங்கள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சியின் வருவாய் பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழல் பேணிகாக்கும் நோக்கில் முக்கிய இடங்களில் மின்சார வாகனங்களுக்கான

சார்ஜிங் நிலையங்கள் அமைக்கும் பணி தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும்.

மாநகராட்சி கட்டிடங்கள் மற்றும் நீர் உந்து நிலையங்களில் சூரிய ஒளி மின் தகடுகள் (Solar Panels) பொருத்தி, மாநகராட்சி செலவுகளை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பேருந்து நிலையங்கள், சந்தைகள், முக்கிய சந்திப்புகள்,அரசு விழா மற்றும் திருவிழாக் காலங்களில் நகரும் கழிப்பறை வைக்கப்படும். திருப்பூர் மாநகராட்சியை இன்னும் தூய்மையான நகரமாக மாற்ற இந்த நகரும் கழிப்பறைகள் பெரும் பங்காற்றும்.

பொழுது போக்கிற்காக வெள்ளிவிழா பூங்கா மற்றும் நொய்யல் நதிக்கரையோரம் பொது மக்கள் அதிகளவில் கூடுவதால் அப்பகுதியில் உணவு வீதி ( Food Street ) அமைக்க சாத்திய கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

புதிய மாநகராட்சி பிரதான அலுவலகக் கட்டிடம் கட்டும் பணி மார்ச் 2027–குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் ஒரு மண்டலத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகளிருக்கான சிறப்பு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

திருப்பூர் மாநகராட்சி அலுவலகத்தை காகிதமில்லா மின்னனு அலுவலகமாக மாற்றுவதற்கு, நடப்பு நிதியாண்டில் ரூ150.00 இலட்சம் மதிப்பீட்டில் 140 எண்ணிக்கை கணிணிகளும், 75 எண்ணிக்கை பிரிண்டர்களும், 30 எண்ணிக்கை ஸ்கேனர்களும் கொள்முதல் செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**"உங்களுடன் மாநகராட்சி"** என்னும் திட்டத்தின் மூலம் திருப்பூர் மாநகராட்சியில் மண்டலத்திற்கு மாதம் 1 முகாம் நடத்தப்படும். இம்முகாமில் மாநகராட்சி சேவைப்பணிகள் தொடர்பாக மனுக்கள் பெறப்பட்டு தகுதியின் அடிப்படையில் பரிசீலனை செய்து தீர்வு செய்யப்படும்.

திருப்பூர் மாநகராட்சியின் நான்கு மண்டல அலுவலகங்களிலும், ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையங்கள் (ICCC) அமைக்கப்படும். மேலும், அலுவலக பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் நான்கு மண்டல அலுவலகங்களிலும், CCTV பொருத்தப்படும்.

திருப்பூர் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்கள் மற்றும் ரிசர்வ் சைட்டுகள் ஆகியவற்றை தூய்மைப்படுத்தி கம்பிவேலி அமைத்து பாதுகாக்கப்படும்.

மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தை பொது மக்கள் விழிப்புணர்வு கொள்ளும் வண்ணம் முன்னெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பொது மக்கள் பயன்பாட்டில் இல்லாத திறந்தவெளி பொதுக் கிணறுகளைச் சுத்தம் செய்து, புணரமைத்து மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

திருப்பூர் மாநகராட்சியில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் , தொலைத் தொடர்பு நிறுவனங்களுடன் இணைந்து வாகன ஓட்டிகளுக்கு இடையூறாக உள்ள கேபிள்களை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. சாலை விபத்துகளைத் தவிர்க்கவும், மழைக் காலங்களில் ஏற்படும் மின் விபத்துகளைத் தடுக்கவும் முன்னுரிமை பெறுகிறது. சாலை ஓரங்களில் இரைச்சலாகத் தெரியும் கேபிள்களை அகற்றுவதன் மூலம் மாநகரத்தின் தோற்றம் மேம்படும்.

கழிவுத் தணிக்கையைத் துல்லியமாக மேற்கொள்ள , வார்டுக்கு ஒன்று என்ற வீதத்தில் 60 புதிய மின்னணு எடை இயந்திரங்கள் (50 கிலோ கொள்ளளவு ) மாநகராட்சி பொது நிதியிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டமானது சோதனை அடிப்படையில் மண்டலம் 1 இல் 02.01.2026 அன்று தொடங்கப்பட்டு 765 தூய்மைப் பணி களப்பணியாளர்கள் பயன் பெற்று வந்தனர் . தற்போது 09.02.2026 முதல் மாநகரம் முழுவதும் முழுமையாக விரிவுபடுத்தப்பட்டு 3173 தூய்மைப் பணி களப்பணியாளர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

தூய்மை பணியாளர்கள் மாதம் ஒரு முறை மருத்துவ பரிசோதனையும், அவர்கள் அன்றாடம் பணி மேற்கொள்வதற்கு தளவாட சாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படும்.

திருப்பூர் மாநகராட்சியை நெகிழிப் பயன்பாடற்ற (Plastic Free City) மாநகராட்சியாக மாற்றவும் , 50 மைக்ரானுக்கும் குறைவான பிளாஸ்டிக் பயன்பாட்டிற்கு தடை செய்தல், மஞ்சள் பை பயன்பாட்டினை ஊக்குவித்தல் மற்றும் திடக்கழிவுகளை தரம் பிரிப்பது குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி , கண்காணிப்பு மையங்கள் மூலம் அதிநவீன செயற்கை நுண்ணறிவு (AI) வசதி கொண்ட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட உள்ளன.

திருப்பூர் மாநகராட்சியின் 'குப்பையில்லா நகரம்' என்ற இலக்கை எய்திட, பொதுமக்களால் திறந்தவெளியில் குப்பைகள் கொட்டப்படும் 331 இடங்கள் (Garbage Vulnerable Points – GVP) கண்டறியப்பட்டு, அங்கு தேங்கியிருந்த கழிவுகள் முழுமையாக அகற்றப்பட்டுள்ளன.

மாநகரின் முக்கியப் பகுதிகளில் இரவு நேரங்களில் சாலைகளை சுத்தம் செய்ய வழிவகை செய்யப்படும். பேருந்து நிலையம் போன்ற மக்கள் அதிகம் கூடும் இடங்களில் வாரத்திற்கு இரண்டு முறை தூய்மை பணி மேற்கொள்ளப்படும்.

தெருநாய்களை கட்டுப்படுத்தும் பொருட்டு பொது மக்கள் நலன் கருதி போர்கால அடிப்படையில் புதிய மெகா விலங்கு பிறப்புக் கட்டுப்பாட்டு மையம் (ABC) நிறுவப்படும்.

திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 1 முதல் 4 வரையுள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்தும் பொருட்டு , மாநகராட்சியில் பதிவு செய்யப்பட்ட குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு ரூ.5,000/– வரை ஊக்கத்தொகை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திருப்பூரின் பொருளாதார முதுகெலும்பான பருத்தியை ( Cotton) மையமாகக் கொண்டு, கையில் துடைப்பம் மற்றும் தரம் பிரிக்கப்பட்ட கழிவுத் தொட்டிகளுடன் பிரத்யேக விழிப்புணர்வு சின்னம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பட்டியலினத்தவர்கள் இறந்தால் அவர்களின் குடும்பத்திற்கு ஈமக்காரியங்களை மேற்கொள்ள விதிகளுக்குட்பட்டு ஈமச்சடங்கு தொகை உடனடியாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாநகரின் வளர்ச்சிக்கு ஆரம்ப காலத்தில் இடம் வழங்கிய கொடையாளர்களை நினைவு கூறும் வண்ணம் அவர்களின் வரலாற்றுடன் கூடிய மார்பளவு சிலையினை மாநகராட்டு மையத்தில் (Convention Centre) உட்பகுதியில் அமைக்க பூர்வாங்க பணிகள் தொடங்கப்பட்டு எதிர்வரும் டிசம்பர் 2026–க்குள் சிலை அமைக்கும் பணிகள் முடிக்கப்படும்.

மாநகராட்சிப் பள்ளிகளில் பயின்று வரும் சதுரங்கப் போட்டிகளில் ஆர்வமிக்க மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக அவர்களுக்கு சிறந்த சதுரங்க அகாடமி மூலம் பயிற்சி வழங்கப்படும்

மாநகராட்சியில் உள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பணியிடை பயிற்சி, புத்தாக்கப் பயிற்சி, நவீன தொழில்நுட்பமான செயற்கை நுண்ணறிவை (AI) கையாள்வதற்கு ஏதுவாக சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டு, மேலும் சிறப்பாக மாநகராட்சி பணிகளை மேற்கொள்ள இந்நிதியாண்டில் ரூ.20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2024–25ம் நிதியாண்டில் ரூ .136.00 கோடியாக இருந்த சொத்துவரி நடப்பு கேட்பு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளின் மூலம் 2025–26ம் நிதியாண்டில் ரூ.154.00 கோடியாக உயர்ந்துள்ளது . விடுப்பட்ட அனைத்து சொத்துவரி இனங்களும் கண்டறிந்து வரி விதிப்பு செய்யப்பட்டு வருவாய் உயர்த்தப்படும்.

மாநகரப் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களுக்கு **சொத்துவரி விதிக்கப்பட்டதன்** மூலம் சொத்துவரியாக ரூ **.20.66** கோடி வருவாய் பெறப்பட்டுள்ளது. மேலும் ஆய்வு செய்யப்பட்டு மீதமுள்ள தனியார் கல்வி நிறுவனங்களுக்கு வரி விதிப்பு செய்யப்பட்டு வருவாய் ஈட்டப்படும்.

தினசரி சந்தை அரசின் அனுமதி பெற்று நான்கு தலைமுறைகளாக கடை நடத்தியவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில், சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கு கடைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

புவிசார் தகவல் தொழில்நுட்ப முறையில் (Geographical Information System) வரைபடங்கள் தயார் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பணிகளை மேற்கொண்டதன் மூலம் அரசிடமிருந்து ரூ.3.00 கோடி ஊக்கத் தொகையாக வரப்பெற உள்ளது. இந்த திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும்.

மாநகராட்சி பகுதியில் உள்ள 40984 தெருவிளக்கு மின்கம்பங்களில் ஒவ்வொன்றிற்கும் குறியீடு செய்யப்படவுள்ளது

ஸ்மார்ட் கம்பங்கள் வைஃபை (Wi–Fi) மற்றும் கேமரா வசதிகளுடன் கூடிய மின்கம்பங்கள் 50 இடங்களில் நிறுவப்படும்.

மாலை நேர சிறப்பு வகுப்புகளில் பங்கேற்கும் மாணவர்கள் சோர்வின்றிப் படிக்க சிற்றுண்டி மற்றும் ஊட்டச்சத்து பானங்கள் வழங்க மாநகராட்சி நிர்வாகம் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளது.

மண்டலம் 1 மற்றும் 2 –ற்குட்பட்ட பகுதிகளுக்கு குப்பைகளை ஏற்றிச் செல்லும் வசதி கொண்ட 7 புதிய இலகுரக வாகனங்கள் (LCV) கொள்முதல் செய்ய ரூ . 85.75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது . மண்டலம் 3 மற்றும் 4 ற்குட்பட்ட பகுதிகளுக்கு 8 புதிய இலகுரக வாகனங்கள் (LCV) கொள்முதல் செய்ய ரூ. 97.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநகராட்சியின் கழிவு மேலாண்மை கட்டமைப்பை நவீனப்படுத்தவும் , குறிப்பிட்ட வகை கழிவுகளை அறிவியல் பூர்வமாக அழிக்கவும் நாப்கின் எரியூட்டி (Napkin Incinerator) மற்றும் தோட்டக் கழிவு மற்றும் மரக்கழிவுகளை அரைக்கும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளன.

நடப்பு நிதியாண்டில் மாமன்ற உறுப்பினர்கள் அலுவலகம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

தன்னார்வலர்கள் பங்களிப்புடன் திருப்பூர் மாநகரில் உள்ள அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகளுக்கும், குமரன் மகளிர் கல்லூரி, சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, எல்.ஆர்.ஜி. மகளிர் கல்லூரிக்கு 100 கணினிகள் வரும் நிதியாண்டில் வழங்கப்படும்.

இந்தியாவில் உள்ள தலை சிறந்த பல்வேறு நிறுவனங்களை அழைத்து வேலை வாய்ப்பு முகாம் நடத்தி வேலை வாய்ப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நம் மாநகரில் உள்ள பழமை வாய்ந்த அருள்மிகு. விஸ்வஸ்வர சுவாமி மற்றும் வீர்ராகவப் பெருமாள் திருக்கோயில்களில் வைகாசி விசாகத் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற ஊர் கூடி தேர் இழுக்க நம் மாநகராட்சியின் சார்பில் விழா சிறக்க ஒத்துழைப்பு நல்கப்படும். அதுபோல் சமூக மத நல்லிணக்கத்தை மேம்படுத்த அனைத்து மத கோவில் திருவிழாக்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கப்படும்.

மான்பினிலே குறையாத மக்களாட்சி
மழையாக நிமிர்ந்து நிற்கும் நோக்கத்தில்
ஏனென்று கேட்கின்ற எண்ணமூட்டி
ஏற்றத்தை தமிழினமே பெறுவதற்கு எழுச்சியூட்டி
ஓர் அணியில் தமிழ் இனத்தை திரட்டுகின்ற
உரிமை நாயகன் தளபதியாரே !
நம் மாநகர வளர்ச்சிக்கு எண்ணற்ற திட்டங்கள்
ஏழ்மையினை போக்குவதற்கு
எழில் உலகாய் மாற்றுவதற்கு ஏற்றிவைத்தார்
மக்கள் நலம் காக்கும்
அடிப்படை வசதி திட்டங்களை
முன்னேற்ற பாதையிலே
நம் மாநகராட்சியை மூழ்கச் செய்த முதல்வரே !
வேற்றுமை பாராத அனைவரும் ஓர் அணியாய் இணைந்து
திறன்மிகு திருப்பூர் மாநகராட்சியை
முதன்மை மாநகராட்சியாக மாற்ற சூளுரைப்போம் !

எனக் கூறி , திருப்பூர் மாநகராட்சி மக்களின் நலன் கருதி தயாரிக்கப்பட்டுள்ள 206–27 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ந.தினேஷ்குமார் M.I.B.,
மேயர்



**M.P.அமித், I.A.S.,**
**ஆணையாளர்.**

## முன்னுரை

சீர்மிகு மற்றும் நிலையான வளர்ச்சியை நோக்கி திருப்பூர் மாநகராட்சியினை கொண்டு செல்லும் வகையிலும், வருவாயினைப் பெருக்கி அன்றாட செயல்பாடுகளை நவீனமயமாக்கும் வகையிலும் 2026–27ஆம் ஆண்டின் திருப்பூர் மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்** அவர்களால் திருப்பூர் மாநகராட்சிக்கு அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் கடந்த ஆண்டுகள் மற்றும் நடப்பாண்டில் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அரசின் புதிய திட்டங்களையும் நிறைவேற்றும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள 2026–27ஆம் ஆண்டின் திருப்பூர் மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கையினை முன்மொழிவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சீர்மிகு நகரம் (SMART CITY) திட்டத்தின் கீழ் ரூ.965.00 கோடி மதிப்பீட்டில் 28 பணிகள் எடுக்கப்பட்டு அவற்றில் ரூ.797.35 கோடி மதிப்புடைய 27 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1 பணியான 6 சிப்பங்கள் அடங்கிய நொய்யல் ஆறு மேம்பாடு செய்தல் பணியில் 4 சிப்பப்பணிகள் ரூ.131.16 கோடி முடிக்கப்பட்டு, 2 சிப்பப்பணிகள் ரூ.36.49 கோடி 98 சதவீதம் முடிக்கப்பட்டுள்ள நிலையில் நடப்பாண்டில் 31.03.2026க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு முழுமையாக கொண்டு வரப்படும்.

மக்கள் நெருக்கம் அதிகமுள்ள பகுதிகளில் கழிவுநீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வண்ணம் பாதாள சாக்கடைத் திட்டத்தினை விரிவுபடுத்த உத்தேசித்து, அம்ருத் திட்டத்தில் 62835 வீட்டு இணைப்புகள் வழங்கும் பணிகள் மார்ச் –2026 க்குள் முடிக்கப்படும் , மேலும்

அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் ரூ.192.95 கோடியில் பணிகள் தொடங்கப்பட்டு 53 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் அக்டோபர் 2027–க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பராமரிப்பிற்காக ரூ.5.00 கோடியும், அம்ரூத் திட்டத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.27.06 கோடியில் – ஊக்கத்தொகையும் பெறப்பட்டுள்ளது. மேலும்,பாதாள சாக்கடை விடுபட்ட வார்டு பகுதிகளுக்கு சாத்திய கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வரும் காலங்களில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அம்ரூத் திட்டத்தின் கீழ் குடிநீர் திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு 98 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 15வது மத்திய நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் விடுபட்ட பகுதிகளில் ரூ.48.01 கோடி மதிப்பீட்டில் 380.324 கி.மீ நீளத்திற்கு குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் 86 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளது. மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் குடிநீர் பகிர்மான குழாய்கள் மற்றும் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிகளை கண்காணிக்கும் பொருட்டு SCADA system அமைக்கும் பணி ரூ.11.33 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு 95 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

இதர அரசு திட்டங்களான முதல்வர் படிப்பகம், அலுவலக கட்டிடம், பல்நோக்கு விளையாட்டு மைதானம், போன்ற பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. கோவில் வழியில் பேருந்து நிலையம் கட்டும் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சியில் பொதுமக்களின் முக்கிய தேவையான புதிய குடிநீர்த்திட்டம் மற்றும் பாதாள சாக்கடைத்திட்டம் ஆகிய பணிகளால் சேதமடைந்த சாலைகள் புதுப்பித்தல் மற்றும் மண் சாலைகளை தார் சாலைகளாக மாற்றுதல் ஆகியவை தமிழ்நாடு நகர்ப்புர சாலை உட்கட்டமைப்பு திட்டம், நகர்ப்புர சாலை மேம்பாட்டு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் மூலம் அரசின் நிதி பெறப்பட்டு, ரூ.535.67 கோடி மதிப்பீட்டில் 6216 எண்ணிக்கையிலான

சாலைகள் 973.52 கி.மீ நீளத்திற்கு சீரமைக்கப்பட்டு பணிகள் முடிவுற்றுள்ளது. மேலும் 85.05 கி.மீ நீளத்திற்கு ரூ.56.19 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் நடராஜா தியேட்டர் சாலை பகுதியில் உயர்மட்ட பாலம் மற்றும் சங்கிலிப்பள்ளம் பகுதியில் உயர்மட்ட பாலம் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும், ஈஸ்வரன் கோயில் பாலம் 80 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளது. O&M DGF –ன் கீழ் நல்லாறு பகுதியில் பாலங்கள் அமைக்கும் பணி 75 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு மாநகரின் பல்வேறு இடங்களில் 36 எண்ணிக்கை நகர்ப்புர நல்வாழ்வு மையங்கள் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மக்களுக்குத் தேவையான பொது சுகாதார பணிகள், அரசின் “**மக்களைத் தேடி மருத்துவம்**” திட்டம், டாக்டர் கலைஞரின் “**வருமுன் காப்போம்**” திட்டம் ஆகிய திட்டங்கள் நடப்பு நிதியாண்டில் சிறந்த முறையில் நடத்தப்பட்டது. எதிர்வரும் நிதியாண்டிலும் பொது சுகாதார பணிகள் மேலும் சிறந்த முறையில் நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாநகராட்சி பகுதிகளில் சுற்றித்திரிந்த 5535 எண்ணிக்கையிலான தெருநாய்களை பாதுகாப்பான முறையில் பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டு, ANTI RABIES VACCINE (ARV) தடுப்பூசி செலுத்தி பிடித்த இடத்திலேயே திரும்ப விடப்பட்டுள்ளது. 2026–27ம் நிதியாண்டில் இப்பணிகள் மேலும் சிறந்த முறையில் செயல்படுத்தப்படும்.

தன்னார்வலர்களுடன் இணைந்து மாநகரில் ஐந்துக்கும் மேற்பட்ட இடங்களில்அதிக எண்ணிக்கையிலான மரக்கன்றுகள் நடப்பட்டு பசுமை பகுதிகள் (Green cover) உருவாக்கப்பட்டுள்ளது. 2025–26ம் நிதியாண்டில் நொய்யலாற்றின் கரைகளின் இருபுறமும் மரக்கன்றுகள் நட்டு பசுமை பகுதிகள் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் தன்னார்வலர்களுடன் இணைந்து மாநகரின் பல்வேறு பகுதிகளில் உள்ள 36

எண்ணிக்கையிலான பூங்காக்களை பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் மாநகரின் பசுமை பகுதிகள் அதிகரிக்கப்படும்.

திருப்பூர் மாநகராட்சியில் உள்ள 253 புதிய பணியிடங்களில் நடப்பாண்டில் இப்பணியிடங்களில் 11 பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க பணிமூப்பு பட்டியல் வெளியிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் காலியாக இருந்த 15 துப்புரவு ஆய்வாளர்கள், 4 படவரைவாளர்கள், 10 தொழில்நுட்ப உதவியாளர்கள், 8 நகரமைப்பு உதவி பொறியாளர்கள் மற்றும் 19 உதவி பொறியாளர்கள் பணியிடங்களுக்கு தேர்வு மற்றும் நேர்காணல் நடத்தி முடிக்கப்பட்டு இப்பணியிடங்கள் அனைத்தும் முழுமையாக நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு விரைவான சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

பள்ளி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.11.34 கோடி மதிப்பீட்டில் 10 பள்ளிகளில் புதிய வகுப்பறைகள் மற்றும் ரூ.16.19 கோடி மதிப்பீட்டில் 46 வகுப்பறைகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும் ரூ.3.22கோடி மதிப்பீட்டில் 8 புதிய வகுப்பறைகள் மற்றும் ரூ.2.52 கோடி மதிப்பீட்டில் 32 பள்ளிகளில் வகுப்பறை மற்றும் கழிவறை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு மாநராட்சிக்குட்பட்ட கே.வி.ஆர் நகர், குளத்துப்பாளையம் மற்றும் நல்லூார் பகுதிகளில் ரூ.3.60 கோடி மதீப்பிட்டில் கூடுதலாக மருத்துவமனை கட்டிடங்கள் கட்டப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது. மேலும், ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மேட்டுப்பாளையம் பகுதியில் மருத்துவமனை கட்டிடம் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் 5 இடங்களில் புதியதாக சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது விரைவில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

மாநகரில் நிலவி வரும் குப்பை பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் உருவாக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி திடக்கழிவு மேலாண்மை பணிகளில் முன்னேற்றம் காணும் வகையில் மறுசுழற்சி மையங்கள் 4 இடங்களில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது, 28 நுண்ணுரமாக்கும் மையங்களில் ரூ.170.00

இலட்சம் மதிப்பீட்டில் இயந்திரங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளது, ரூ.368.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் ஆண்டு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. குப்பைகளை பொது மக்கள் தரம் பிரித்து வழங்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில் வீடுகளுக்கு 70000 இரு வண்ண குப்பை தொட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்து வீடுகளுக்கும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மரக்கழிவுகளை அரைக்கும் இயந்திரம், நாப்கின் நீற்றுலை இயந்திரம், குப்பை கொட்டப்படும் இடங்களை கண்காணிக்க AI கேமாராக்கள், மஞ்சள்பை தானியங்கி இயந்திரங்கள் நிறுவுதல் போன்ற பணிகள் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. கோழிக்கழிவுகள், உலர் கழிவுகள், தொழிற்சாலைக்கழிவுகள், இரவு நேர உணவகங்களின் கழிவுகள் நிலையான செயல்பாட்டு நடைமுறைகளின் படி மேலாண்மை செய்யப்பட்டு வருகிறது.

திருப்பூரின் பொருளாதார முதுகெலும்பான பருத்தியை மையமாகக் கொண்டு ஒரு பிரத்யேக விழிப்புணர்வு சின்னம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

அன்னியச் செலாவணியை பெருமளவு ஈட்டித்தரும் தொழில் நகரமான திருப்பூர் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்து வருகிறது. வேகமாக வளர்ந்து வரும் இம்மாநகரின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு, மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ள 2026–27ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையினை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

M.P.அமித் I.A.S.,
ஆணையாளர்

# வரவு செலவுத் திட்டம் 2026-2027


| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி & ஆரம்பக் கல்வி நிதி ஆகியவற்றின் சுருக்கம் | 1 |
| 2 | **வருவாய் மேம்பாடு** | |
| | • சொத்து வரி | 2 |
| | • 2025-26ம் நிதியாண்டில் சொத்துவரி 15 சதவீதம் வளர்ச்சி | 2 |
| | • கல்வி நிறுவனங்கள் | 2 |
| | • MSTC முறையில் ஏலம் (Metal Scrap Trade Corporation Limited) | 3 |
| 3 | **சீர்மிகு நகரம் (SMART CITY ) திட்டம்** | |
| | • நொய்யல் ஆறு மேம்பாடு செய்தல், இருபுறமும் நடைபாதையுடன் கூடிய சாலைகள் அமைத்தல் | 4 |
| | • சீர்மிகு நகரத்திட்ட சேமிப்பு நிதி - அம்ருத் திட்டத்திற்கு மாற்றுதல் (மாநகராட்சி பங்குத்தொகை) | 5 |
| 4 | **அம்ருத் திட்டம் 2017-2020** | |
| | • புதிய குடிநீர் திட்டம் | 5 |
| | • குடிநீர் விநியோகம் | 7 |
| | • குடிநீர் விநியோகம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு | 7 |
| | • 15வது மத்திய நிதிக்குழு மானியம் (விடுபட்ட பகுதிகளுக்கு குடிநீர் குழாய்கள் பதித்தல்) | 8 |
| | • மூலதன மானிய நிதி -2023-24 (SCADA) | 8 |
| | • பாதாள சாக்கடைத் திட்டம் | 9 |
| | • அம்ருத் 2.0 | 10 |
| | • பாதாள சாக்கடை அமைப்பு விபரம் | 10 |
| | • OCEMS (Online Continous Effluent Monitoring System) | 11 |
| | • கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய பராமரிப்பு ஊக்கத்தொகை | 12 |
| | • அம்ருத் திட்டப்பணிகளின் சிறப்பான செயல்பாட்டிற்கான ஊக்கத்தொகை | 13 |
| | • பாதாள சாக்கடை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் | 13 |
| | • மாநகராட்சி கடன் பத்திரம் | 14 |
| | • நெடுஞ்சாலைத்துறை வைப்பு தொகை பணி | 14 |
| 5 | **பொறியியற் பிரிவு** | |
| | • முதல்வர் படைப்பகம் | 15 |
| | • அலுவலக கட்டடம் | 16 |
| | • பல்நோக்கு விளையாட்டு மைதானம் (TURF) | 16 |
| | • பேருந்து நிலையம் | 17 |
| | • தமிழ்நாடு நகர்புர சாலை மேம்பாட்டுத் திட்டம் | 17 |
| | • சாலை பணிகள் | 18 |
| | • மாநில நிதிக்குழு திட்டம் | 18 |
| | • சிறப்பு நிதி | 18 |
| | • 15வது மத்திய நிதிக்குழு மான்யம் | 19 |
| | • பொதுமக்களிடமிருந்து வரப்பட்ட மனுக்களில் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | 19 |

| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | • சாலைகளில் ஏற்பட்டுள்ள குழிகளை சீரமைத்தல் (Patch/Potholes) | 19 |
| | • நம்ம சாலை செயலி ( Namma Salai App.) | 19 |
| | • பிரதான மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் | 19 |
| | • பாலங்கள் அமைத்தல் | 20 |
| | • வார்டு சபை பணிகள் (Special Ward Sabha Works) | 21 |
| | • பள்ளி கட்டடங்கள் | 21 |
| | • பூங்கா அமைத்தல் | 21 |
| | • தேசிய நகர்புற சுகாதார நிலையம் | 22 |
| | • நடைபாதை (Health walk) | 22 |
| | • நமக்கு நாமே திட்டம் | 23 |
| | • சமூக பங்களிப்பு நிதி (CSR fund) | 23 |
| | • கைப்பேசி தொடர்பு கருவி ( *Wireless walkie-talkie*) | 23 |
| | • சமுதாய மற்றும் பொது கழிப்பிடங்கள் | 23 |
| | • திட்டப்பணிகளில் மாநகராட்சி பங்களிப்பு | 23 |
| | • சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நிதி | 24 |
| | • நவீன துார்வாரும் இயந்திரம் (Recycler Vehicle) | 24 |
| | • தாய்மூகாம்பிகை நகர் மேல்நிலைத் தொட்டி | 24 |
| | • உணவு அரங்கம் (Food Court) | 25 |
| | • கூடுதல் அலுவலக கட்டடம் | 25 |
| | • தெருவிளக்கு கம்பங்களுக்கு குறியீடு செய்தல் | 25 |
| | • புவிசார் தகவல் தொழில்நுட்ப (Geographical Information System) வரைபடங்கள் தயார் செய்தல் | 26 |
| | • நல்லாறு ஓடையை மேம்படுத்துதல் | 26 |
| 6 | **பொது பிரிவு** | |
| | • மனிதவளம் மற்றும் மேம்பாடு | 27 |
| | • *E-Office* | 27 |
| | • உங்களுடன் ஸ்டாலின் | 28 |
| | • ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (*ICCC*) | 28 |
| | • முதலமைச்சரின் காலை உணவு திட்டம் | 29 |
| | • புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம் | 30 |
| 7 | **நகரமைப்பு** | |
| | • விளம்பர பலகை மற்றும் பதாகைகள்-விளம்பரக் கட்டணம் | 31 |
| | • நகர்புற பசுமைமயமாக்கல் | 32 |
| | • திருப்பூர் மாநகராட்சி அழகுபடுத்துதல் | 33 |
| | • *PM-SVANidhi* சாலையோர வியாபாரிகளுக்கு வாழ்வாதார திட்டம் | 33 |
| | • பூங்காக்கள், திறவிடங்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் | 34 |
| | • ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் | 35 |
| | • மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்குதல் | 36 |
| | • கண்ணாடியிழை வடங்கள் வரன்முறைபடுத்துதல் | 36 |
| | • இணைப்பு சாலைகள் | 37 |

| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 8 | பொதுசுகாதாரம் | |
| | • பிரத்தியேக விழிப்புணர்வுச் சின்னம் | 39 |
| | • திடக்கழிவு மேலாண்மை மற்றும் செயல்பாட்டு நிதி ஒதுக்கீடு | 40 |
| | • நீதிமன்ற வழிகாட்டுதல்கள் மற்றும் சட்ட ரீதியான செயல்பாடுகள் | 40 |
| | • நகராட்சி நிர்வாக இயக்குநர் (DMA) அவர்களின் ஆய்வு மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்கள் | 41 |
| | • இடுவாய் தற்காலிக திடக்கழிவு சேமிப்பு மையக் கட்டமைப்பு | 43 |
| | • கழிவு நீர் மேலாண்மை, பாதுகாப்பு மற்றும் மின்விளக்கு வசதிகள் | 43 |
| | • நுண் உரமாக்கல் மையங்களின் (MCC) செயல்பாடுகள், இயக்குதல், ஆண்டு பராமரிப்பு மற்றும் இயற்கை உர விநியோகம் | 44 |
| | • மக்கும் கழிவு செயலாக்கம் | 45 |
| | • மறுசுழற்சி மையம் கட்டுதல் (Resource recovery centre) | 45 |
| | • நுண்ணுரமாக்கும் மையம்-இயக்குதல் & பராமரித்தல் (Micro Compost centre) | 46 |
| | • நுண்ணுயிர் உரமாக்கல் மையங்களின் (MCC) இயக்குதல் மற்றும் ஆண்டு பராமரிப்பு (AMC) | 46 |
| | • பழைய கழிவுகள் மேலாண்மை செய்வதற்கு இயந்திரங்கள் நிறுவுதல் (TROMMEL) | 47 |
| | • உயிரி எரிவாயு (Bio-methanation) ஆலை & Bio-CNG பெருந்திட்டங்கள் | 49 |
| | • 10 மெ.டன் உயிரி எரிவாயு ஆலை (Bio-Methanation Plant) | 50 |
| | • 200 TPD Bio-CNG ஆலைத் திட்டம் | 50 |
| | • தூய்மைப் பணி வாகன கட்டமைப்பு மற்றும் நவீனமயமாக்கல் | 51 |
| | • அறிவியல் பூர்வமான கழிவுத் தணிக்கை மற்றும் வழித்தட மறுசீரமைப்பு | 52 |
| | • தூய்மைப் பணியாளர் நலன் மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டுத் திட்டம் | 53 |
| | • வீடுகளுக்கான குப்பைத் தொட்டிகள் வழங்கல் மற்றும் தரம் பிரித்தல் ஊக்குவிப்பு | 54 |
| | • பரப்புரையாளர்கள் மூலம் விழிப்புணர்வு | 55 |
| | • கல்வி நிறுவனங்களில் விழிப்புணர்வு | 55 |
| | • விழிப்புணர்வுப் பணிகள் (IEC) மற்றும் 'மஞ்சள் பை' பயன்பாடு ஊக்குவிப்பு | 55 |
| | • மஞ்சள் பை தானியங்கி இயந்திரங்கள் | 56 |
| | • செயற்கை நுண்ணறிவு (AI) கேமராக்கள் மூலம் தீவிரக் கண்காணிப்பு மற்றும் அமலாக்கம் | 56 |
| | • கண்காணிப்பு மையங்கள் | 56 |
| | • விதிமீறல்கள் கண்டறிதல் | 57 |
| | • நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் (SOP) | 57 |
| | • சிறப்பு கழிவு மேலாண்மை மற்றும் நவீன இயந்திரங்கள் கொள்முதல் | 58 |

| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | • நாப்கின் நீற்றுலை *(Napkin Incinerator)-* | 58 |
| | • தோட்டக் கழிவு (ம) மரக்கழிவுகளை அரைக்கும் இயந்திரம் | 58 |
| | • மண்டல அளவிலான கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் கூட்டுத் திட்டம் *(Cluster-based Waste to Energy Project)* | 58 |
| | • நெகிழி கழிவு மேலாண்மை *(Plastic Waste Management)* | 59 |
| | • சிறப்பு கழிவு சேகரிப்பு முகமைகள் | 60 |
| | • இரவு நேரக் குப்பைச் சேகரிப்பு முறை | 61 |
| | • திறந்தவெளி குப்பை கொட்டும் இடங்களை மீட்டெடுத்தல் மற்றும் அழகுபடுத்துதல் | 61 |
| | • அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகளை சுகாதாரமாக பராமரித்தல் | 62 |
| | • பள்ளி மாணவர்களுக்கு மாலை நேர சிறப்பு சிற்றுண்டி | 62 |
| | • சதுரங்க பயிற்சி | 62 |
| | • தெருநாய்களை கட்டுப்படுத்துதல் *(Animal Birth Control)* | 63 |
| | • தூய்மை இந்தியா திட்டம் *(SBM)* | 65 |
| | • மாநகராட்சி பணியாளர்களுக்கு சீருடை மற்றும் காலணி வழங்குதல் | 66 |
| | • டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்தல் | 66 |
| | • பொதுசுகாதார பணிக்கு கிருமிநாசினிகள் வாங்குதல் | 67 |
| | • தூய்மைப் பணியாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தளவாட சாமான்கள் வழங்குதல் | 68 |
| | • அறுவசை சிகிச்சை அரங்கம் புனரமைப்பு பணி | 69 |
| | • நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் | 70 |
| | • மக்களைத் தேடி மருத்துவம் | 70 |
| | • டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித்திட்டம் | 70 |
| | • புதிய அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் | 70 |
| | • புற்றுநோய் சிகிச்சைக்கான பிரத்யேகக் கட்டிடம் | 71 |
| | • நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் பணிகள் | 73 |
| | • தூய்மைப் பணியாளர்களின் சமூக நலனை மேம்படுத்துதல் | 74 |
| | • திடக்கழிவு மேலாண்மை - குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கான ஊக்கத்தொகைத் திட்டம் | 75 |

## வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதி ஆகியவற்றின் சுருக்கம்

| விபரம் | வருவாய் நிதி | குடிநீர் வடிகால் நிதி | கல்வி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | | | ரூ. இலட்சத்தில் |
| வருவாய் வரவினம் | 44,812.24 | 15,393.42 | 961.60 | 61,167.26 |
| மூலதன வரவினம் | 42,659.90 | 24,085.00 | 1,300.00 | 68,044.90 |
| மொத்தம் | 87,472.14 | 39,478.42 | 2,261.60 | 1,29,212.16 |
| வருவாய் செலவினம் | 41,170.76 | 21,446.44 | 495.00 | 63,112.20 |
| மூலதன செலவினம் | 43,677.82 | 20,817.18 | 1,300.00 | 65,795.00 |
| மொத்தம் | 84,848.58 | 42,263.62 | 1,795.00 | 1,28,907.20 |
| உபரி / (பற்றாக்குறை) | 2,623.56 | (2,785.20) | 466.60 | 304.96 |

வருவாய் மற்றும் மூலதனநிதியில் ரூ.**2,623.56** இலட்சம் உபரியாகவும், குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் ரூ.**2,785.20** இலட்சம் பற்றாக்குறையாகவும் மற்றும் ஆரம்பக் கல்வி நிதியில் ரூ.**466.60** இலட்சம் உபரி இருப்பாகவும், மொத்தமாக ரூ.**304.96** இலட்சம் உபரி இருப்பாகவும் **2026–27**ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.






# வருவாய் மேம்பாடு

## சொத்து வரி

திருப்பூர் மாநகராட்சி வருவாயினை பெருக்குவதற்கு பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிதியாண்டில் 3549 எண்ணிக்கை சொத்துவரி விதிப்பு ஏற்படுத்தப்பட்டு வருடாந்திர கேட்பு ரூ.35.20 கோடி உயர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் விடுபட்ட சொத்துவரி இனங்கள், வரி விதிக்கப்படாத கட்டிடங்கள், உபயோக மாற்றம் செய்யப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றைக் கண்டறிந்து வரும் நிதியாண்டில் விடுதலின்றி சொத்துவரி விதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாநகராட்சியின் வருவாய் கணிசமாக உயர்ந்தப்படும். மேலும் விடுபட்ட அனைத்து தொழில்வரி இனங்களும் கண்டறிந்து வரி விதிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 2025-26ம் நிதியாண்டில் சொத்துவரி 15 சதவீதம் வளர்ச்சி

2024-25ம் நிதியாண்டில் ரூ.136.00 கோடியாக இருந்த சொத்துவரி நடப்பு கேட்பு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளின் மூலம் 2025-26ம் நிதியாண்டில் ரூ.154.00 கோடியாக உயர்ந்துள்ளது. இது 15 சதவீதம் வளர்ச்சி விகிதமாகும். மேலும் சொத்துவரி வசூல் 2023-24ல் ரூ.114.20 கோடியாக இருந்தது. 2024-2025ல் ரூ. 130.25 கோடியாகவும் 2025-2026ல் ரூ.149.79 கோடியாக வசூலிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் மற்றும் அடிப்படை தேவைகள் முழுமையாக நிறைவேற்றப்படும். 2026-27ம் நிதியாண்டில் கல்விவரி மாநகராட்சி பள்ளிகளின் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை தேவைகளுக்காக மூன்று மடங்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கல்வி நிறுவனங்கள்

திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள தனியார் பள்ளிகள் உரிமையாளர்கள் சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்: WMP.No 32754, 32764 & 32770/2018, WP No.28099,28113 & 28123/2018ன் படி மாநகராட்சிக்குட்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு விலக்களிக்க வேண்டும் என வழக்கு தொடரப்பட்டது. மேலும் இவ்வழக்கு மாநகராட்சிக்கு சாதகமாக சொத்துவரி விதிப்பு செய்யலாம் என தீர்ப்பு பெறப்பட்டது. மேலும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு 166க்கு தற்போது வரை 231 வரிவிதிப்பு எண் விதிக்கப்பட்டு 20.66 கோடி வருவாய் பெறப்பட்டுள்ளது.

## MSTC முறையில் ஏலம் (Metal Scrap Trade Corporation Limited)

திருப்பூர் மாநகராட்சியின் மண்டலம் 3, வார்டு 44 க்குட்பட்ட சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு இயங்கி வரும் தினசரி பூ மார்க்கெட் மற்றும் அதனுடன் இணைந்துள்ள இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கான குத்தகை இனத்திற்கான ஏலத்தொகை முதல் மூன்றாண்டு குத்தகைகால முடிவில் ரூ. 2.77 கோடியாக இருந்த நிலையில், மின் ஏலம் நடத்துவதில் நிபுணத்துவம் வாய்ந்த ஒன்றிய அரசு நிறுவனமான MSTC இன் மூலம் முதல் முறையாக மின் ஏலம் நடத்தியதில் அக்குத்தகை இனத்திற்க்கான 2026-2029 மூன்றாண்டுகளுக்கான குத்தகை, ஆண்டுக்கு ரூ. 4.10 கோடியாக உயர்ந்துள்ளது. மேலும் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள மாநாட்டு மையம், பல அடுக்கு வாகன நிறுத்துமிடம், புதிய பேருந்து நிலையம் மற்றும் தினசரி சந்தை முதலிய அனைத்து வருவாய் இனங்களும் பொது ஏலம் வழியாக ஒப்படைக்கப்பட்டு மாநகராட்சியின் வருவாய் மேம்படுத்தப்படும்.

## சீர்மிகு நகரம் (SMART CITY ) திட்டம்

திருப்பூர் மாநகராட்சியில் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் 28 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அவற்றில் 27 பணிகள் முடிக்கப்பட்டது. மீதமுள்ள 6 சிப்பங்கள் அடங்கிய 1 பணியில் 4 சிப்பங்களின் பணிகள் முடிவுற்றது. 1 சிப்பப்பணி 95 சதவீதம் முடிவுற்றுள்ளது. 1 சிப்பப்பணி 85 சதவீதம் முடிவுற்றுள்ளது. இப்பணிகள் மார்ச் 2026–க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

## நொய்யல் ஆறு மேம்பாடு செய்தல், இருபுறமும் நடைபாதையுடன் கூடிய சாலைகள் அமைத்தல்

மாநகரின் மையப்பகுதியில் நொய்யல் ஆறு, சங்கிலிப்பள்ளம் மற்றும் ஜம்மனை ஓடைகள் செல்கின்றன. இயற்கை வளம் மிக்க நொய்யலாற்றினை 6.70 கி.மீ நீளத்திற்கு தூய்மைப்படுத்தி இரு கரையோரங்களிலும் தடுப்புச்சுவர்கள், கழிவுநீர் கால்வாய், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், நடைபாதை மற்றும் சாலைகள் அமைத்தும், கண்ணைக்கவரும் மின் விளக்குகள் அமைத்தும் அழகுற மேம்பாடு செய்ய சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் ரூ.167.65 கோடிக்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதுவரை 98 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளது. மார்ச் 2026–க்குள் இப்பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.



## சீர்மிகு நகரத்திட்ட சேமிப்பு நிதி – அம்ருத் திட்டத்திற்கு மாற்றுதல் (மாநகராட்சி பங்குத்தொகை)

திருப்பூர் மாநகராட்சியில் நடைபெற்று வரும் சீர்மிகு நகரத்திட்ட பணிகளில் 28 பணிகளுக்கு ரூ.965.00 கோடி பெறப்பட்டதில் இதுவரை முடிவுற்ற மற்றும் நடைபெற்று வரும் பணிகளில் உள்ள சேமிப்புத்தொகை ரூ.8.11 கோடியை அம்ருத் திட்டத்திற்கு (Convergence Projects) மாற்றம் செய்யப்பட்டது. இதனால் அம்ருத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் திட்டம் மற்றும் பாதாள சாக்கடைத்திட்ட பணிகளுக்கு மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய வேண்டிய பங்கு தொகைக்கான நிதிச்சுமை குறைக்கப்பட்டுள்ளது.

## அம்ருத் திட்டம் 2017–2020

### புதிய குடிநீர் திட்டம்

திருப்பூர் மாநகராட்சியில் அம்ருத் 2017–2020– திட்டத்தின் கீழ் புதிய குடிநீர் திட்டப்பணிகள் ரூ.1179.81 கோடி மதிப்பீட்டில் 6 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

- இத்திட்டத்தின் சிப்பம்–1ன் கீழ் தலைமை நிலையம் மற்றும் 19.83 கி.மீ நீளத்திற்கு பிரதான குழாய்கள் அமைத்தல் பணிகள் ரூ.132.36 கோடி மதிப்பீட்டில் முழுமையாக முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இதன் மூலம் 100 MLD குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது.



- சிப்பம்–2ன் கீழ் 196MLD கொள்ளளவு கொண்ட சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணி ரூ.95.02 கோடி மதிப்பீட்டில் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு 01.01.2023 முதல் குடிநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

- சிப்பம்–3ன் கீழ் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து மாநகர் முழுமைப்பகுதிக்கும் 144.208 கி.மீ நீளத்திற்கு நீருந்து பிரதான குழாய்கள் அமைத்தல் பணிகள்ரூ.405.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது.
- சிப்பம்–4ன் கீழ் 12 இடங்களில் புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டுதல், 615.736 கி.மீ நீளத்திற்கு குடிநீர் விநியோகக் குழாய்கள் பதித்தல் பணிகள்ரூ.203.06 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு 98 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் ஜூன்–2026–க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.
- சிப்பம்–5ன் கீழ் 17 இடங்களில் புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டுதல், 589.26 கி.மீ நீளத்திற்கு குடிநீர் விநியோகக் குழாய்கள் பதித்தல் பணிகள்ரூ.184.37 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு 96 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் ஜூன்–2026–க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.
- சிப்பம்–6ன் கீழ் குடிநீர் விநியோக மண்டலம் 30 மற்றும் 50–ன் பகுதிகளில் 24X7 முறையில் குடிநீர் விநியோகம் செய்ய 66.96 கி.மீ நீளத்திற்கு குடிநீர் விநியோகக் குழாய்கள் பதித்தல் பணிகள் ரூ.41.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுக்கப்பட்டது. மேற்படி பணிக்கு திருத்திய நிர்வாக அனுமதி ரூ.53.57 கோடிக்கு G.O(M.s)No.140 MAWS(MC6) Dt.21.10.2024ன் படி பெறப்பட்டு இதுவரை 88 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளது.இப்பணிகள் ஜூன்–2026–க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.



- இத்திட்டத்தில் கட்டப்பட்டுள்ள 29 மேல்நிலைத்தொட்டிகளில் இதுவரை 7 மேல்நிலைத்தொட்டிகளில் சோதனை ஓட்டம் முடிவுற்றது. மீதமுள்ள 22 மேல்நிலைத்தொட்டிகளில் இதுவரை சராசரியாக 57.55% சோதனை ஓட்டம்

முடிவுற்றது. இப்பணிகள் ஜூன்-2026-க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

## குடிநீர் விநியோகம்

தற்போது திருப்பூர் மாநகரின் குடிநீர் தேவைக்கு NTADCL-70MLD, TWAD-20MLD மற்றும் 4th Scheme-100MLD ஆகிய மூன்று திட்டங்களின் மூலம் குடிநீர் பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வரும் 2026-27ம் நிதியாண்டில் 4வது புதிய குடிநீர் திட்டத்தின் மூலம் கூடுதல் குடிநீர் பெறப்படும் போது புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம் மூலம் பெறப்படும் கூடுதல் குடிநீர் அளவு குறைக்கப்பட்டு சலுகை ஒப்பந்தத்தில் உள்ள அளவு மட்டுமே பெறும்போது அதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் குறையும்.

## குடிநீர் விநியோகம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு

திருப்பூர் மாநகராட்சிக்கு 2017-2020ஆம் ஆண்டு அம்ருத் திட்டத்தின் கீழ் ரூ.1179.81 கோடி மதிப்பீட்டில் பவானி ஆற்று நீரை ஆதாரமாக கொண்டு புதிய குடிநீர் திட்டம் 6 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மேட்டுப்பாளையம் சாமன்னா நீரேற்று நிலையம் அருகே கட்டப்பட்டுள்ள தலைமை நீரேற்று நிலையம் மற்றும் தலைமை நீரேற்று நிலையம் முதல் அன்னூரில் (குருக்கிலியம்பாளையம்) அமைந்துள்ள 196 MLD கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் வரை 19.83 கி.மீ நீளத்திற்கு அமைந்துள்ள 1400 விட்டமுள்ள நீருந்து குழாய் ஆகியவற்றை ஒரு வருடத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல் பணியையும் மற்றும் அன்னூரில் (குருக்கிலியம்பாளையம்) அமைந்துள்ள 196 MLD கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் முதல் திருப்பூர் மாநகராட்சியில் உள்ள 68 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் வரை பதிக்கப்பட்டிருக்கும் குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை ஒரு வருடத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல் பணியையும் மேற்கொள்ளும் போது பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்க இயலும். மேற்படி பணிகள் மூலம் தலைமை நீரேற்று

நிலையத்திலுள்ள 6 மின்மோட்டார்கள் இயங்குவதன் மூலம் சுமார் 150 MLD குடிநீர் பெற இயலும்.அதன் தொடர் நடவடிக்கையாக புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம் மூலம் பெறப்படும் கூடுதல் குடிநீர் அளவு குறைக்கப்பட்டு சலுகை ஒப்பந்தத்தில் உள்ள அளவு மட்டுமே பெறும்போது அதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் குறையும்.

**15வது மத்திய நிதிக்குழு மானியம் (விடுபட்ட பகுதிகளுக்கு குடிநீர் குழாய்கள் பதித்தல்)**

15வது மத்திய நிதிக்குழு மானியம் [15th CFC 2021-22 & 2022-23]ன் கீழ் விடுபட்ட பகுதிகளுக்கு குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் ரூ.48.01 கோடி மதிப்பீட்டில் 380.324 கி.மீ நீளத்திற்கு குடிநீர் விநியோகக் குழாய்கள் பதித்தல் பணி நடைபெற்று வருகின்றன. இதுவரை 86 சதவீத பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இப்பணிகள் ஜூன்-2026-க்குள் முழுமையாக முடிக்கப்படும்.

## மூலதன மானிய நிதி -2023-24 (SCADA)

மூலதன மானியம் நிதி 2023-24ன் கீழ் அம்ருத் 2017-20ன் கீழ் குடிநீர் திட்டத்தில் கட்டிமுடிக்கப்பட்ட நீர் எடுக்கும் கிணறு பம்பு ஹவுஸ், பிரதான குடிநீர் பகிர்மானக் குழாயில் 5 இடங்கள் (5 Tapping point) மற்றும் 68 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் உள்ள நீரேற்றுக்குழாய்களில் (Inlet) SCADA system மூலம் நீரின் அளவை கண்காணித்தல் பணிக்கு ரூ. 11.33 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 95 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளது. இப்பணிகள் மார்ச் 2026-க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். இதன் மூலம் அனைத்து மேல்நிலைத் தொட்டிகளுக்கும் நிர்ணயிக்கப்பட்ட அளவு குடிநீர் வழங்க இயலும்.



## பாதாள சாக்கடைத் திட்டம்

திருப்பூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை அமைப்பு புவியியல் அமைப்புக்கு ஏற்ப 17 கழிவுநீர் மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

மாநகரின் மையப்பகுதியில் உள்ள 1 முதல் 4 வரையிலான கழிவுநீர் மண்டலங்களில் பாதாள சாக்கடைத் திட்டம் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம் மூலம் செயல்படுத்தப்பட்டது.

- அம்ருத் 2017–2020– திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் ரூ.798.88 கோடி மதிப்பீட்டில் 4 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.
- சிப்பம்–1ன் கீழ் கழிவுநீர் மண்டலம் 5, 6 மற்றும் 7–ல் பாதாள சாக்கடை கழிவுநீர் சேகரிப்பு அமைப்பு, துணை கழிவுநீர் உந்து நிலையம், தலைமை கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிகள் ரூ.381.22 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு 99 சதவீத பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இப்பணிகள் மார்ச்–2026–க்குள் முழுமையாக முடிக்கப்படும்.



- சிப்பம்–2ன் கீழ் கழிவுநீர் மண்டலம் 8, 13 மற்றும் 14–ல் பாதாள சாக்கடை கழிவுநீர் சேகரிப்பு அமைப்பு, துணை கழிவுநீர் உந்து நிலையம், தலைமை கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிகள் மற்றும் சர்க்கார் பெரியபாளையம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய விரிவாக்கப் பணிகள் ரூ.132.95 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு 98 சதவீத பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இப்பணிகள் மார்ச்–2026–க்குள் முழுமையாக முடிக்கப்படும்.

- சிப்பம்–3ன் கீழ் கழிவுநீர் மண்டலம் 9, 15, 16 மற்றும் 17–ல் பாதாள சாக்கடை கழிவுநீர் சேகரிப்பு அமைப்பு, துணை கழிவுநீர் உந்து நிலையம், தலைமை கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிகள் ரூ.167.12 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு 98 சதவீத பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இப்பணிகள் மார்ச்–2026–க்குள் முழுமையாக முடிக்கப்படும்.



- சிப்பம்–4ன் கீழ் சர்க்கார் பெரியபாளையத்தில் 36 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சின்னாண்டிபாளையத்தில் 20 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிகள் ரூ.72.57 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு 30.11.2022 முதல் கழிவுநீர் சுத்திகரிப்பு பணி நடைபெற்று வருகிறது.

## அம்ருத் 2.0

அம்ருத் 2.0 – திட்டத்தின் கீழ் கழிவுநீர் மண்டலம் 11, 11.1 மற்றும் 11.3–ல் பாதாள சாக்கடை கழிவுநீர் சேகரிப்பு அமைப்பு, துணை கழிவுநீர் உந்து நிலையம், தலைமை கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிகள் ரூ.192.95 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு இதுவரை 53 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் ஒப்பந்தத்தின்படி அக்டோபர் 2027–க்குள் முழுமையாக முடிக்கப்படும்.

## பாதாள சாக்கடை அமைப்பு விபரம்

- புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம் மூலம் செயல்படுத்தப்பட்ட திட்டம் மற்றும் அம்ருத் திட்டத்தின் மூலம் வார்டு எண்கள் 1,2,3,4,5,6,7,8,11,14,15,16,17,18,19,21,22,24,26,27,28,29,30,31,32,37,38,39

மற்றும் 42 ஆகியவற்றில் பாதாள சாக்கடை அமைப்பு முழுமையாக உருவாக்கப்பட்டுள்ளது.9,12,13,20,23,25,33,34,35,36,40,43,44,45,50,51,52,55 மற்றும் 56 ஆகிய வார்டுகளில் பாதாள சாக்கடை அமைப்பு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 29 வார்டுகளில் பாதாள சாக்கடை அமைப்பு செயல்பட்டு வருகிறது.

- ·அம்ருத் 2.0 திட்டத்தின் மூலம் வார்டு எண்கள் 46,48 மற்றும் 49 ஆகிய வார்டுகளில் முழுமையாக பாதாள சாக்கடை அமைத்தல் பணி நடைபெற்று வருகிறது. 45,50,55 மற்றும் 56 ஆகிய வார்டுகளில் பாதாள சாக்கடை அமைப்பு பகுதியாக அமைத்தல் பணி நடைபெற்று வருகிறது.
- ·பாதாள சாக்கடை அமைப்பு இதுவரை இல்லாத 10,41,47,53,54,57,58,59 மற்றும் 60 ஆகிய வார்டுகள் மற்றும் ஏற்கனவே பாதாள சாக்கடை அமைப்பு உள்ள வார்டுகளில் விடுபட்ட பகுதிகளுக்கும் பாதாள சாக்கடை அமைக்க சாத்தியக்கூகூறுகள் ஆய்வு செய்யப்பட்டு படிப்படியாக இனி வரும் ஆண்டுகளில் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## OCEMS (Online Continous Effluent Monitoring System)

சர்க்கார் பெரியபாளையம் மற்றும் சின்னாண்டிபாளைம் ஆகிய பகுதிகளில் இயங்கிவரும் 86MLD கொள்ளளவு கொண்ட 3 பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வரும் கழிவுநீரின் அளவு மற்றும் தன்மையினை கண்டறிவதற்கு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் விதிகளை பின்பற்றும் வகையில் 24 மணி நேரமும் (OCEMS) இணையதள தொழில்நுட்ப வாயிலாக கண்காணிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட சின்னான் நகர், முள்ளுக்காடு, காசிபாளையம் மற்றும் ஆலங்காடு பகுதிகளில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலும் (**OCEMS**) இணையதள தொழில்நுட்ப வாயிலாக கண்காணிக்கும் அமைப்பை தலா ரூ.28.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய பராமரிப்பு ஊக்கத்தொகை

சர்க்கார் பெரியபாளையம் பகுதியில் இயங்கிவரும் (புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தினரால் பராமரிக்கப்பட்டு வரும்) 15MLD கொள்ளளவு மற்றும் அம்ருத் 2017-20 திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 36MLD கொள்ளளவு பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சிறப்பான செயல்பாடு மற்றும் பராமரிப்பிற்கு 2025-26-ம் ஆண்டில் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.5.00 கோடி ஊக்கத்தொகையாக பெறப்பட்டது. இனிவரும் நிதியாண்டுகளிலும் இதே போன்று சிறப்பான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். இதனை பெறுவதன் மூலம் மாநகராட்சியின் நிதிச்சுமை பெருமளவு குறையும். இதன் மூலம் பெறப்பட்ட நிதியின் மூலம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய மேம்பாடு மற்றும் பராமரிப்பு பணிகளை மட்டுமே மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## அம்ருத் திட்டப்பணிகளின் சிறப்பான செயல்பாட்டிற்கான ஊக்கத்தொகை

திருப்பூர் மாநகராட்சியில் அம்ருத் 2017-20 திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குடிநீர் திட்டம் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளுக்கு வரப்பெற்ற ஊக்கத்தொகை பின்வருமாறு

- குடிநீர் இணைப்பு வழங்கியதற்கு (PI-1) -ரூ. 6,35,20,000 /-.
- பணி, குறித்த காலக்கெடுவிற்குள் விரைவாக முடிக்கப்பட்டதற்கு (PI-2)-ரூ. 17,32,55,691/-.
- சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மறுபயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்பட்டதற்கு (PI-3) - ரூ. 25,90,000/-
- பாதாள சாக்கடை அமைப்பு இல்லாத பகுதிகளில் உள்ள வீடுகளிலிருந்து தனியார் லாரிகள் மூலம் எடுக்கப்படும் கழிவுநீரை (Septic Tank-லிருந்து) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் அமைந்துள்ள Decanting அமைப்பு மூலம் பெறப்பட்டு சுத்திகரிப்பு செய்வதற்கு (PI-4) - ரூ. 2,84,70,000/-.

- Implementation of Gender Action Plan (PI–5) – ரூ. 28,00,000/–.
- ஆகியவற்றிற்கு 2022–23 முதல் 2024–25ம் நிதியாண்டு வரை ரூ.27,06,35,691/– நமது மாநகராட்சிக்கு ஊக்கத்தொகையாக வழங்க ஆசிய வளர்ச்சி வங்கி அரசிற்கு பரிந்துரை செய்துள்ளது. இதன் மூலம் பெறப்படும் நிதியினை குடிநீர் விநியோகம் மற்றும் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளுக்கு மட்டுமே மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனை பெறுவதன் மூலம் மாநகராட்சியின் நிதிச்சுமை பெருமளவு குறையும்.

## பாதாள சாக்கடை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள்

திருப்பூர் மாநகராட்சிக்கு 2017–2020ஆம் ஆண்டு அம்ருத் திட்டத்தின் கீழ் ரூ.798.88 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம் 4 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 544.281 கி.மீ நீளத்திற்கு கழிவுநீர் சேகரிக்கும் குழாய்கள் அமைத்தல், 9 கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டுதல், 44.086 கி.மீ நீளத்திற்கு கழிவுநீர் உந்து குழாய்கள் அமைத்தல், 71 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டுதல், 62,835 வீட்டு இணைப்புகள் வழங்குதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றது. இதுவரை 99 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளது. இதில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு மட்டும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி ரூ.1.54 கோடி மதிப்பீட்டில் 2023–ம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கழிவுநீர் சேகரிக்கும் குழாய்கள் அமைப்பு மற்றும் இதர பணிகளுக்கு ரூ. 9.76 கோடி மதிப்பீட்டில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ளும் பாதாள சாக்கடை அமைப்பு உள்ள பகுதிகளில் சுகாதார கேடு ஏற்படாத வண்ணம் பொதுமக்களுக்கு சேவை செய்ய இயலும்.

## மாநகராட்சி கடன் பத்திரம்

அம்ருத் 2017–20 திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் 4 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை 99 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளது. மேற்கண்ட பணிக்கு பல்வேறு காரணங்களினால் ஏற்பட்ட கூடுதல் செலவினங்களுக்கு G.O(M.s)No.139 MAWS(MC6) Dt.21.10.2024ன்படி திருத்திய நிர்வாக அனுமதி ரூ.798.88 கோடிக்கு பெறப்பட்டதில் கூடுதல் தொகை ரூ.162.48 கோடி (அரசு மானியம் ரூ34.82 கோடி, மாநகராட்சி கடன் பத்திரம் மூலம் ரூ.100.00 கோடி. மாநகராட்சி பங்கு தொகையாக ரூ.27.66 கோடி) ஆகும். மேற்படி மாநகராட்சி கடன் பத்திரம் மூலம் ரூ.100.00 கோடி பெறுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பணிகள் முடிவுற்று 8.50 சதவீத வட்டி விகிதத்தில் ரூ.100.00 கோடி பெறப்பட்டது. மேற்படி தொகை பெறப்பட்ட நாளிலிருந்து முதல் ஐந்து வருடங்களுக்கு மாதம் ஒன்றிற்கு வட்டியாக ரூ.85.00 இலட்சத்தை 6 மாதங்களுக்கு ஒரு முறை (85.00X6=510.00 இலட்சம்) செலுத்த வேண்டும். ஆறாவது வருடம் முதல், ஆண்டிற்கு அசல் ரூ.20.00 கோடியும் மற்றும் 8.50 சதவீத வட்டி விகிதத்திற்குரிய தொகையையும் திரும்ப பத்தாவது ஆண்டிற்குள் செலுத்த வேண்டும்.



## நெடுஞ்சாலைத்துறை வைப்பு தொகை பணி

அம்ருத் திட்டத்தில் பதிக்கப்பட்ட குழாயினை மாற்றி அமைக்கும் பணிகள்

அவிநாசி–மேட்டுப்பாளையம் இருவழி சாலையினை நான்கு வழி சாலையாக அகலப்படுத்தும் பணி நெடுஞ்சாலைத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் பொருட்டு திருப்பூர் மாநகராட்சியின் பயன்பாட்டிலுள்ள குடிநீர் குழாய்கள் 1670 மீட்டர் நீளம் மற்றும் மதகுகள் 31 இடங்களில் (Air valve and Scour

valve) மாற்றி அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுப்பப்பட்டது. அதன் பேரில் நெடுஞ்சாலைத்துறை மூலம் ரூ.1050.46 இலட்சம் வைப்பு தொகையாக மாநகராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டுத்தொகையை வைப்பு தொகையாக மாநகராட்சிக்கு செலுத்தியதின் பேரில் குடிநீர் குழாய்கள் மற்றும் வால்வுகளை சில இடங்களில் மாற்றி அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் மார்ச் 2026 இறுதிக்குள் முடிக்கப்படும்.

## பொறியியற் பிரிவு

### முதல்வர் படைப்பகம்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையம் அருகில் சுமார் 1.82 ஏக்கரில் ரூ.3.10 கோடி மதிப்பீட்டில் 2178 சதுரடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் முதல்




தளத்துடன் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய முதல்வர் படிப்பக கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இப்பணிகள் முடிவுறும் நிலையில் அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் அறிவை மேம்படுத்தவும், மாணவ மாணவிகளுக்கு தங்களது கல்வித்திறனை மேம்படுத்தும் வகையிலும், மாணவர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல், எதிர்காலத்திற்கு தேவையான திறன்களை வளர்த்தல் மற்றும் போட்டி தேர்வுகள் தேர்ச்சி பெற உதவும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மற்றும் மிடுக்கான நகரத் திட்டத்தின் கீழ் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் நஞ்சப்பா ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நூலகம் மற்றும் அறிவுசார்மையம் அமைக்கப்பட்டு தினசரி 100க்கு மேற்பட்டவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இங்கு பயின்று பல்வேறு அரசுப்பணிகளில் 10க்கும் மேற்பட்ட நபர்கள் பணியில் சேர்ந்துள்ளனர்.

## அலுவலக கட்டடம்

புதிய மாநகராட்சி பிரதான அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், திருப்பூர் மாவட்டத்திற்கான அறிவிப்பின் கீழ் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு. கருணாநிதி மத்திய பேருந்து நிலையம் எதிரில் 3.32 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் இரண்டு தளங்களுடன் 2.21 ஏக்கர் பரப்பளவில் ரூ.46.80 கோடி மதிப்பீட்டில் சாலை



மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற நவீன வசதி மற்றும் தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய அலுவலக கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இப்பணி மார்ச் 2027ம் தேதிக்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

## பல்நோக்கு விளையாட்டு மைதானம் (TURF)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திருப்பூர் மாவட்டத்திற்கான 11/08/2025 அன்று உடுமலை நகரில் நடைபெற்ற மாவட்ட அளவிலான அரசு கள ஆய்வு



மற்றும் நலத்திட்ட விழாவில் திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண். 49 அமர்ஜோதி கார்டன் பகுதியில் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு விளையாட்டு மைதானம் அமைக்க அறிவிப்பு வழங்கப்பட்டதன்படி குழந்தைகளின் விளையாட்டு திறன்களை மேம்படுத்த ஏதுவாக மேற்கண்ட இடத்தில் கால்பந்து உள்விளையாட்டு அரங்கம் 6825.00 ச.மீ பரப்பளவில் ரூ.481.00 இலட்சம் மதிப்பீட்டில் மூலதன மான்ய நிதி 2025–26ம் கீழ் அமைக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. பணி விரைவில் துவங்கப்பட உள்ளது.

அமர்ஜோதி கார்டன் பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய கால்பந்து விளையாட்டு மைதானம் அமைக்கப்படும் பொழுது அப்பகுதி மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் உள்ள பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் மிகுந்த பயன் அடைவார்கள்.

## பேருந்து நிலையம்

திருப்பூர் மாநகராட்சி காமராசர் சாலை பகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையம் மற்றும் பெருமாநல்லூர் சாலையில் தீரன் சின்னமலை வடக்கு பேருந்து நிலையம் என இரண்டு பேருந்து நிலையங்கள் இயங்கி வருகிறது. திருப்பூர் மாநகர பகுதியின் தென் மாவட்டங்களுக்கு செல்லும் பேருந்துகளை இயக்க ஏதுவாக கோவில்வழி பகுதியில் தென்மாவட்டங்களுக்கு செல்லும் பொது மக்கள் பயன்படும் வகையில் 42 பேருந்து நிறுத்துமிடங்களுடன் ரூ.26.00 கோடி மதிப்பீட்டில், உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிதியில் (I & A 2022–23) சுமார் 4.85 ஏக்கர் பரப்பளவில் ரூ.13.00 கோடி மற்றும் இதர திட்டங்களின் மூலம் 13.00 கோடியில் தியாகி திருப்பூர் குமரன் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 11/08/2025 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளதால், மாநகர பகுதியில் போக்குவரத்து நெரிசல் அப்பகுதியில் சுமார் 2.00 இலட்சம் பொது மக்கள் பயன்பெற்று வருகின்றனர்.



## தமிழ்நாடு நகர்புர சாலை மேம்பாட்டுத் திட்டம்

TURIP 2025–26 ( பகுதி 1 ) ஆண்டு திட்டத்தின் கீழ் ரூ.39.58 கோடி மதிப்பீட்டில் 86.42 கி.மீ 641 சாலை பணிகள் எடுக்கப்பட்டு முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

## சாலை பணிகள்

திருப்பூர் மாநகராட்சியில் உள்ள மொத்த சாலைகளின் நீளம் 1627.76 கி.மீ ஆகும். இதில் 185.65 கி.மீ நீளத்திற்கு மண்சாலைகளும், 1294.27 கி.மீ நீளத்திற்கு தார்சாலைகளும், 138.24 கிமீ நீளத்திற்கு சிமெண்ட் சாலைகள், மற்றும் 9.14 கி.மீ நீளத்திற்கு பேவர் பிளாக் சாலைகளும் உள்ளது. இப்பகுதிகளில் புதிய குடிநீர் திட்டம் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளால் தேசமடைந்துள்ள சாலைகளை பல்வேறு திட்டங்கள் மூலம் ( TURIP. SFC- URDF, NSMT, Spl Fund மற்றும் 15வது மத்திய நிதிக்குழு ) சீரமைக்கப்பட்டு வருகிறது. கடந்த நான்காண்டுகளில் 6216 எண்ணிக்கையிலான சாலைகள் சுமார் 973.52 கி.மீ நீளத்திற்கு ரூ.535.67 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு பணிகள் முடிவுற்றுள்ளது.



தற்போது TURIP 2025-26 (பகுதி 2 ன்) கீழ் 808 எண்ணிக்கையிலான சாலைகள் 85.05 கி.மீ நீளத்திற்கு ரூ.56.19 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

## மாநில நிதிக்குழு திட்டம்

SFC 2025–26 கீழ் ரூ.22.28 கோடி மதிப்பீட்டில் 24.66 கி.மீ 190 மண் சாலைகள் தார்சாலைகளாக மாற்றியமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

## சிறப்பு நிதி

Special fund 2025–26 கீழ் ரூ.66.15 கோடி மதிப்பீட்டில் 86.35 கி.மீ 678 சாலை பணிகள் நடைபெற்று முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

### 15வது மத்திய நிதிக்குழு மான்யம்

15th CFC 2025–26 கீழ் ரூ.13.48 கோடி மதிப்பீட்டில் 34.45 கி.மீ 252 சாலை பணிகள் நடைபெற்று வருகிறது.

### பொதுமக்களிடமிருந்து வரப்பட்ட மனுக்களில் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

திருப்பூர் மாநகராட்சி பகுதியில் பொதுமக்களிடமிருந்து வரப்பட்ட குடிநீர், தெருவிளக்கு, சாலைகள் மற்றும் இதர மனுக்களின் மீதான கோரிக்கைகளுக்கு போர்க்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. வரப்பட்ட மனுக்களில் பிரதான சாலை தொடர்பான பணிகளுக்கு முன்னுரிமை அளித்து ரூ.5.85 கோடி மதிப்பீட்டில் 9.60 கி.மீ நீளத்தில் 22 சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளது.




### சாலைகளில் ஏற்பட்டுள்ள குழிகளை சீரமைத்தல் ( Patch / Pot holes)

கடந்தாண்டு ரூ.2.34 கோடி மதிப்பீட்டில் 1574 இடங்களில் தேசமடைந்துள்ள சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளது.

### நம்ம சாலை செயலி ( Namma Salai App.)

பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் புகாரின் அடிப்படையில் சேதமடைந்துள்ள சாலைகளை உடனடியாக சரி செய்யும் வகையில் மண்டலத்திற்கு தலா ரூ.37.50 இலட்சம் என ரூ.150.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் சாலைகளில் ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் சரிசெய்யப்படும்.

### பிரதான மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்

திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள மொத்த வடிகால் நீளம் 1284.09கி.மீ ஆகும். கடந்தாண்டில் பல்வேறு திட்டங்களின் கீழ் சுமார் ரூ.81.36 கோடி மதிப்பீட்டில் 92.70 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் மழை வெள்ளத்தினால் பாதிக்கா வண்ணம் மேலும் 12 இடங்களில் 12.93 கி.மீ நீளத்திற்கு ரூ.38.88 கோடி மதிப்பீட்டில் பிரதான மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

## பாலங்கள் அமைத்தல்

மாநகராட்சி பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டம் (I & A fund – 2022–23) ன் கீழ் ரூ.15.50 கோடி மதிப்பீட்டில் நடராஜா தியேட்டர் சாலை பகுதியில் உயர்மட்ட பாலம் மற்றும் சங்கிலி பள்ளம் பகுதியில் உயர்மட்ட பாலம் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.



மேலும் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டம் (I & A fund – 2022–23)ன் கீழ் திருப்பூர் மாநகராட்சியின் மைய பகுதியில் ரூ.18.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஈஸ்வரன் கோயில் பாலம் 80 சதவீதம் முடிவுற்றுள்ளது. இப்பணியானது வருகின்ற ஏப்ரல் 2026ம் தேதிக்குள் முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

O & M DGF திட்டத்தின் கீழ் ரூ.3.69 கோடி மதிப்பீட்டில் நல்லாறு பகுதியில் பாலங்கள் அமைக்கும் பணி நடைபெற்று 75 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளது. மேலும் பொது நிதியிலிருந்து ரூ.2.63 கோடி மதிப்பீட்டில் கூடுதல் பணிகள் மற்றும் இருபுறங்களிலும் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நல்லாற்று பகுதியில் பெருமாநல்லூர் சாலையில் மேற்கு மட்டும் கிழக்கு பகுதியில் இப்பாலம் அமையும் பொழுது போக்குவரத்து நெரிசல் குறைக்கப்பட்டு பொது மக்கள் பெரும் பயனடைவர். மீதமுள்ள பணிகள் மே 2026ம் தேதிக்குள் முடிவுற்று பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

இரு பாலப்பணிகளும் முடிவுறும் பொழுது பாதசாரிகள் நடந்து செல்லவும், தொழிற்சாலைகளின் கனரக வாகனங்கள் செல்லவும் மற்றும் பொது மக்கள் போக்குவரத்திற்கு நெரிசல் இன்றி பயணம் மேற்கொள்ளவும் ஏதுவாக இருக்கும்.

### வார்டு சபை பணிகள் (Special Ward Sabha Works)

சிறப்பு வார்டு சபை கூட்டத்தில் வரப்பட்ட மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பொதுமக்களின் அடிப்படை வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால், குடிநீர் போன்ற பல்வேறு பணிகள் செய்வதற்கு மொத்தம் ரூ.618.00 இலட்சம் மதிப்பீட்டில் 164 பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

### பள்ளி கட்டடங்கள்

பள்ளி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.11.34 கோடி மதிப்பீட்டில் 10 பள்ளிகள் புதிய வகுப்பறைகள் மற்றும் ரூ.16.19 கோடி மதிப்பீட்டில் 46 வகுப்பறைகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு மாணவ மாணவிகள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தற்சமயம் ரூ.3.22 கோடி மதிப்பீட்டில் 8 புதிய வகுப்பறைகள் மற்றும் ரூ.2.52 கோடி மதிப்பீட்டில் 32 பள்ளிகளில் வகுப்பறை மற்றும் கழிவறை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.




### பூங்கா அமைத்தல்

தமிழ்நாடு காலநிலை தகவமைப்பு மற்றும் மீள்தன்மை கொண்ட மாவட்டமாக மாற்றம் செய்யும் பொருட்டு (TN-CARD) மாநகராட்சியில் உள்ள பூங்கா அபிவிருத்திப் பணிகளை 8 இடங்களில் மேற்கொள்ள ரூ.818.00 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம் (Tamil Nadu Green Climate Company) TNGCC மூலம் காலநிலை மாற்றத்திற்கான தொலைநோக்கு பார்வையுடன் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்பி வைக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட உள்ளது. இப்பணிகள் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

## தேசிய நகர்புற சுகாதார நிலையம்

திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட கே.வி.ஆர் நகர், குளத்துப்பாளையம், மற்றும் நல்லூார் பகுதிகளில் ரூ.3.60 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக மருத்துவமனை கட்டடங்கள் கட்டடப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது. பொதுமக்கள் பயன்பெறும் வகையில் விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

மேலும், ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் தேசிய நகர்புற சுகாதார மைய திட்டத்தின் கீழ் மேட்டுப்பாளையம் பகுதியில் மருத்துவமனை கட்டடம் மற்றும் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் 5 இடங்களில் புதிய சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது. வரும் நிதியாண்டில் பணிகள் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.



## நடைபாதை (Health walk)

திருப்பூர் மாநகராட்சி சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் நொய்யல் ஆற்றினை மேம்படுத்தும் வகையில் இருகரைகளில் தடுப்பு சுவர் மற்றும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் தார்சாலை அமைக்கும் பணிகள் முடிவுற்றுள்ளது. மேற்கண்ட தடுப்பு சுவர் மற்றும் தார்சாலைகளுக்கு இடையே உள்ள பகுதியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பூங்கா மற்றும் நடைபாதை அமைக்க ரூ.1.20 கோடி மதிப்பீட்டிற்கு கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் முடிவுறும் பட்சத்தில் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் உடற்பயிற்சி மற்றும் நடைபயிற்சி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.



## நமக்கு நாமே திட்டம்

2024–25ம் நிதியாண்டு ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் 6 புதிய வகுப்பறைகள் மற்றும் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. வரும் நிதியாண்டில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் எடுக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

## சமூக பங்களிப்பு நிதி (CSR fund)

இந்நிதியின் கீழ் மிடுக்கான வகுப்பறைகள், சூரிய மின் விளக்குகள், மழைநீர் சேகரிப்பு, மறுசுழற்சி இயந்திரங்கள் போன்ற பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.




## கைப்பேசி தொடர்பு கருவி ( Wireless walkie–talkie)

**திருப்பூர் மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் ஏராளமான பணிகளை மேற்பார்வை செய்வதை எளிமையாக்கும் வகையில் ஊழியர்கள் அனைவருக்கும் கைப்பேசி தொடர்பு கருவி ( Wireless walkie–talkie) 162 எண்கள் சமூக பங்களிப்பு நிதியிலிருந்து கொள்முதல் செய்து விநியோகிக்கப்பட்டுள்ளது**

## சமுதாய மற்றும் பொது கழிப்பிடங்கள்

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மாநகராட்சி பகுதிகளில் ரூ.653.00 இலட்சம் மதிப்பீட்டில் 18 புதிய பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் ரூ.248.00 இலட்சம் மதிப்பீட்டில் 91 கழிப்பிடங்களுக்கு பராமரிப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## திட்டப்பணிகளில் மாநகராட்சி பங்களிப்பு

திருப்பூர் மாநகராட்சியில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப்பணிகளில் மாநகராட்சி பங்களிப்புத் தொகையாக 2025–26ம் ஆண்டு அலுவலக கட்டத்திற்கு

ரூ.30.00 கோடி, நகர்புர சாலை உட்கட்டமைப்பு நிதியின் கீழ் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க ரூ.36.35 கோடி, பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணியில் பாலம் கட்டும் பணிக்கு ரூ.3.32 கோடி, பல்நோக்கு விளையாட்டு மையம் அமைக்க ரூ.1.92 கோடி மற்றும் பிரதான மழைநீர் வடிகால் அமைக்க ரூ.23.50 கோடி ஆக மொத்தம் மாநகராட்சி பொதுநிதியின் கீழ் ரூ.95.09 கோடிக்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நிதி

2025–26ம் நிதியாண்டில் பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு பணிகள் சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனையடுத்து 34 பணிகள் ரூ.363.24 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் வரும் நிதியாண்டிலும் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செயல்படுத்தப்படும்.

### நவீன தூர்வாரும் இயந்திரம் (Recycler Vehicle)

கழிவுநீர் கால்வாய்களில் தேங்கும் வண்டல் மண்ணை அகற்றுவதற்கு புதியதாக 13000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மறுசுழற்சி இயந்திரம் ரூ. 390.00 இலட்சம் மதிப்பீட்டில் 15வது மத்திய நிதிக்குழு மான்யத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.



மேலும் 60 வார்டுகளிலும் மழைநீர் வடிகால்கள் மற்றும் கால்வாய்களை பணியாளர்களை நியமித்து தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

### தாய்மூகாம்பிகை நகர் மேல்நிலைத் தொட்டி

தாய்மூகாம்பிகை நகர் பகுதியில் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்த 10.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி பணிகளை முடிக்க 15வது மத்திய நிதிக்குழு மான்யத்தின் கீழ் ரூ.2.00 கோடிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

## உணவு அரங்கம் (Food Court)

திருப்பூர் மாநகராட்சிக்கு தொழில் நிமித்தமாக அதிகளவில் மக்கள் வந்து செல்கின்றனர். மேலும் தொழில் வளர்ச்சி காரணமாக குறைந்த கால இடைவெளியில் மக்கள் அதிகமாக வெளிமாநிலங்களில் இருந்தும் குடியேறி உள்ளதாலும், பொழுதுபோக்கிற்காக வெள்ளிவிழா பூங்கா மற்றும் நொய்யல் நதிக்கரையோரம் பொதுமக்கள் அதிகளவில் கூடுவதால் அப்பகுதியில் உணவு அரங்கம் (Food Court) அமைக்க சாத்திய கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## கூடுதல் அலுவலக கட்டடம்

திருப்பூர் மாநகராட்சி பகுதியில் பொது மக்கள் பயன்பெறும் வகையில் அடிப்படை வசதிகள் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்த தற்சமயம் புதிதாக உதவி பொறியாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதால் மாநகராட்சியில் கூடுதலாக அலுவலக கட்டிடங்கள் தேவைப்படுகிறது. அதற்கு முதற்கட்டமாக நான்கு மண்டலங்களில் தலா ஒரு அலுவலக கட்டிடங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## தெருவிளக்கு கம்பங்களுக்கு குறியீடு செய்தல்

திருப்பூர் மாநகராட்சி பகுதியில் ஏற்கனவே உள்ள மற்றும் சீர்மிகு திட்டம் , 15வது மத்திய நிதிக்குழு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் 40984 தெருவிளக்கு மின்கம்பங்களில் ஒவ்வொன்றிற்கும் குறியீடு செய்யப்படவுள்ளது. இதனால் பொதுமக்களால் அளிக்கப்பட்ட புகார்களை எளிதில் கண்டறிந்து உடனடியாக பழுதுகளை சரிசெய்ய ஏதுவாக இருக்கும்.

## புவிசார் தகவல் தொழில்நுட்ப (Geographical Information System) வரைபடங்கள் தயார் செய்தல்

திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள மழைநீர் வடிகாலின் (நீளம் 1336.00 கிலோமீட்டர்) விபரங்களை புவிசார் தகவல் தொழில்நுட்ப முறையில் (Geographical Information System) வரைபடங்கள் தயார் செய்யும் பணி ரூ.19.95 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் அம்ருத் திட்டத்தின் கீழ் (24X7) பதிக்கப்பட்ட குடிநீர் குழாய் நீளம் 67.00 கிலோமீட்டர், அம்ருத் திட்டத்தில் விடுபட்ட பகுதிகளில் 15வது மத்திய நிதி குழு மானிய திட்டத்தின் கீழ் பதிக்கப்பட்ட குடிநீர் குழாயின் மொத்த நீளம் 381.00 கிலோமீட்டர் மற்றும் அம்ருத் திட்டத்தின் கீழ் பதிக்கப்பட்ட பாதாள சாக்கடை குழாயின் நீளம் 710.00 கிலோமீட்டர் அவற்றின் விபரங்களை புவிசார் தகவல் தொழில்நுட்ப முறையில் (Geographical Information System) வரைபடங்கள் தயார் செய்யும் பணி ரூ.19.80 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பணிகளை மேற்கொண்டதன் மூலம் அரசிடமிருந்து ரூ.3.00 கோடி ஊக்கத்தொகையாக வரப்பெற உள்ளது.

## நல்லாறு ஓடையை மேம்படுத்துதல்

நல்லாறு ஓடையின் இருபுறமும் தடுப்புச்சுவர் அமைத்தல், இருபுறமும் கரையை மேம்படுத்துதல், தார்சாலைகள் , மழைநீர் வடிகால், சுத்திகரிப்பு



நிலையம், நடைபாதை பூங்கா ஆகியவை அமைத்தல் பணிகள் சுமார் 8 கி.மீ தொலைவிற்கு ரூ.400கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்

## பொது பிரிவு

### மனிதவளம் மற்றும் மேம்பாடு

விரிவு படுத்தப்பட்ட திருப்பூர் மாநகராட்சிக்கு அரசாணை (நிலை) எண்.152, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.சி.7) துறை, நாள்.20.10.2022-ன்படி புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது. இப்பணியிடங்களில் காலியாக இருந்த பணியிடங்களில் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படவேண்டிய 4 பட வரைவாளர் பணியிடங்கள், 9 தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்கள் 15 துப்புரவு ஆய்வாளர் பணியிடங்கள் 8 உதவி பொறியாளர் (திட்டம்) மற்றும் 20 உதவி பொறியாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டது. பணியில் சேர்ந்துகொண்ட 49 அலுவலர்கள் மாநகராட்சி பணிகள் குறித்து அறிந்து கொள்ளும் வண்ணம் கோவை, சென்னை, திருச்சி போன்ற பெருநகரங்களில் செயல்முறைகளுடன் கூடிய தொடக்க நிலை பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மாநகராட்சியில் உள்ள இதர அலுவலர்களுக்கு பணியிடை பயிற்சி மற்றும் புத்தாக்கப்பயிற்சி வழங்க இந்நிதியாண்டில் ரூ.20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### E-Office

திருப்பூர் மாநகராட்சியில் காகிதமில்லா அலுவலகம் (Paperless Government) என்ற திட்டம் செயல்படுத்துவதற்காக நடப்பு நிதியாண்டில் E-Office திட்டம் நடைமுறைப்படுத்த முன்னெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிக்காக நடப்பு நிதியாண்டில் ரூ150.00 இலட்சம் மதிப்பீட்டில் 140 எண்ணிக்கை கணிணிகளும், 75 எண்ணிக்கை பிரிண்டர்களும், 30 எண்ணிக்கை ஸ்கேனர்களும் கொள்முதல் செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநகராட்சியில் காகிதமில்லா அலுவலக



முறையை நடைமுறைபடுத்த அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் கணினி பயிற்சி வழங்கப்படும்

## உங்களுடன் ஸ்டாலின்

மாநகராட்சியின் சேவைப்பணிகளை பொது மக்களிடம் நேரடியாக கொண்டு செல்லும் வகையில் **"உங்களுடன் ஸ்டாலின்"** என்னும் திட்டத்தின்மூலம் திருப்பூர் மாநகராட்சியில் மண்டலத்திற்கு 5 முகாம்கள் வீதம் 20 முகாம்கள் 15.07.2025 முதல் 13.11.2025 வரை நடத்தப்பட்டது. இம்முகாமில் மாநகராட்சி சேவைப்பணிகள் தொடர்பாக 2036 மனுக்கள் பெறப்பட்டு தகுதியின் அடிப்படையில் பரிசீலனை செய்து தீர்வு செய்யப்பட்டுள்ளது. இம்முகாமில் மாநகராட்சி சேவைப்பணிகள் தவிர்த்து அரசின் இதர 16 துறைகளின் சேவைப்பணிகள் வழங்கப்பட்டுள்ளது. இம்முகாமில் சுமார் 2.00 இலட்சம் பொது மக்கள் பங்கேற்று பயன்பெற்றுள்ளனர்.





## ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (ICCC)

திருப்பூர் மாநகராட்சியில் மைய அலுவலகத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய கால் சென்டரில் பெறப்பட்ட 2244 புகார்களும், வாட்ஸ்அப் மூலம் 4735 புகார்களும், இணைய வலைதளம் மூலம் 102 புகார்களும், செய்தித்தாள்கள் மூலம் 1114 புகார்களும்,

தொலைபேசி செயலி வழியாக பெறப்பட்ட 159 புகார்களும் அவற்றிற்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

மைய அலுவலகத்தில் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் சிறப்பாக செயல்படுவதையடுத்து திருப்பூர் மாநகராட்சியின் நான்கு மண்டல அலுவலகங்களிலும், ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையங்கள் இந்நிதியாண்டில் (ICCC) அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், அலுவலக பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் நான்கு மண்டல அலுவலங்களிலும், CCTV பொருத்தப்படும்.




## முதலமைச்சரின் காலை உணவு திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டுகளில் உள்ள 120 மாநகராட்சி துவக்க பள்ளிகளில் பயிலும் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் உள்ள மாணவ மாணவிகளுக்கு காலை உணவு திட்டம் வழங்க 25-08-2023 -ஆம் தேதியன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது மேலும் இத்திட்டத்திற்கு சிறப்பு சேர்க்கும் வகையில் திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் இயங்கும் அரசு உதவி பெறும் 6 துவக்கப் பள்ளிகளுக்கு 26 8 2025 ஆம் தேதி அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சரால் தொடங்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டமானது மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் அவர்தம் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர்களிடம் இருந்து நல்ல வரவேற்ப்பை பெற்றுள்ளது

காலை உணவானது மாணவ மாணவிகளுக்கு சூடாகவும் சுவையாகவும் தரமாகவும் தகுந்த அளவில் வழங்கப்பட்டு வருகிறது இத்திட்டத்தின் மூலம் மாணவ மாணவிகளின் கற்றல் திறன் மற்றும் வருகை பதிவு அதிகரித்துள்ளதாக சம்பந்தப்பட்ட பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

| வருடம் | பள்ளிகளின் எண்ணிக்கை | விரிவாக்கம் செய்யப்பட்ட பள்ளிகள் எண்ணிக்கை | மொத்த பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2024-25 | 120 | 0 | 120 |
| 2025-26 | 126 | 6 | 126 |

| வருடம் | மாணவர்களின் எண்ணிக்கை | விரிவாக்கம் செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | மொத்த உணவு உண்ணும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2024-25 | 22258 | 0 | 22258 |
| 2025-26 | 21737 | 658 | 22395 |

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம்

திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டுகளில் உள்ள 147 மாநகராட்சி பள்ளிகள் மற்றும் 9 அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையுள்ள சத்துணவு உண்ணும் மாணவ மாணவிகள் பயன் பெற்று வருகின்றனர் தமிழக அரசால் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| வருடம் | பள்ளிகளின் எண்ணிக்கை | சத்துணவு உண்ணும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2024-25 | 156 | 44114 |
| 2025-26 | 156 | 42865 |

## நகரமைப்பு

### விளம்பர பலகை மற்றும் பதாகைகள்–விளம்பரக் கட்டணம்

திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வைக்கப்படும் விளம்பர பலகை மற்றும் பதாகைகளை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் 2023, பாகம் 10, விதி 320–340 ன்படி வரன்முறைப்படுத்த ஏதுவாக பதாகைகள் ஒன்றிக்கு ரூ.750/– என கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பதாகைகளை பொது மக்களுக்கும் போக்குவரத்துக்கும் எவ்வித இடையூறுமின்றி அமைத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும்,




கட்டிடங்களின் மேல் பகுதியில் அமைக்கப்படும் நிரந்தர விளம்பரப் பலகைகளுக்கு ஒற்றை சாளரக்குழு (Single Window Committee) அமைக்கப்பட்டு அதன் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றை கூர்ந்தாய்வு செய்து மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் வழங்கி அதற்கான கட்டணங்கள் வசூல் செய்து மாநகராட்சி நிதி நிலையை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த 2024–25 நிதி ஆண்டில் M/S. Best advertiser என்கிற நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் மாநகராட்சிக்கு சொந்தமான 5 எண்ணிக்கையிலான உயர்மட்ட நடை மேம்பாலங்களில் (Sky Walk) விளம்பர பலகைகள் அமைக்க அனுமதி வழங்கி சுமார் ரூ.22.00 லட்சம் வருமானம் ஈட்டப்பட்டது. அதே வண்ணம் இந்த ஆண்டிலும் ஆர்வம் காட்டும் நிறுவனங்களை வரவேற்று உரிய விதிகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படும். மூன்று ஆண்டு காலம் வரை முடிந்தும் உரிமம் புதுப்பிக்காமல் இருக்கும் விளம்பர பலகைகளை வரன்முறைபடுத்திட நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்படும். மாநகராட்சி நுழைவு வாயில்களிலும் பிரதான சாலைகளில் மின்னனு விளம்பர பலகைகள் (Variable Message Dislay) அமைக்க நெடுஞ்சாலைதுறையுடன் இணைந்து பொது தனியார்




கூட்டாண்மை மூலம் நிறுவப்படும். இது மாநகராட்சிக்கு கூடுதல் வருவாயாக அமையும். கடந்த ஆண்டு மாநகராட்சிக்குட்பட்ட நான்கு மண்டலங்களிலும் 71 எண்ணிக்கையிலான அனுமதியின்றி அமைக்கப்பட்ட விளம்பர பலகைகளை கண்டறிந்து அவற்றை வரன்முறைப்படுத்த அறிவிப்புகள் அளிக்கப்பட்டும், அகற்றப்பட்டும் வருகிறது, இவ்வண்ணம் திருப்பூர் மாநகராட்சியை அனுமதியற்ற பலகைகள் இல்லாத நகரமாக மாற்ற இயலும்.

**நகர்புற பசுமைமயமாக்கல்**

திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 2024-25 நிதி ஆண்டில் தோராயமாக ஆயிரம் மரக் கன்றுகள் ஆந்திர மாநிலம், ராஜமுந்திரியிலிருந்து கொள்முதல் செய்து நகர்புற பசுமைமயமாக்கல் திட்டத்தின்கீழ் நடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு (2025-26) நகராட்சி நிர்வாகத்துறை இயக்குனரகம் மரக்கன்றுகள் நடும் இலக்கினை 37,500 என திருப்பூர் மாநகராட்சிக்கு நிர்ணயம் செய்துள்ளது. இந்நேர்வில் மரங்கள் நடுவதற்குரிய இடங்களாக நீர்நிலைகள், பூங்காக்கள், சாலை மையத்தடுப்புகள், திறவெளியிடங்கள் மாநகராட்சி



பள்ளிகள் மற்றும் மாநகராட்சி கட்டிடங்கள் ஆகிய இடங்களில் உதவி பொறியாளர்கள் (நகரமைப்பு) ஒருவருக்கு தலா 6000 எண்ணிக்கையிலான மரங்கள் நடுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதி (CSR Fund), சமூக தன்னார்வலர்கள் (NGO), தொழில் மற்றும் கல்வி நிறுவனங்களின் நிதியுதவியுடன் செயல்படுத்த தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாநகராட்சி பிரதான சாலைகளிலுள்ள ரவுண்டானாக்கள் மற்றும் மையத்தடுப்புக்கள் சமூக தன்னார்வளர்களின் நிதி உதவியுடன் மரக்கன்றுகள் நடும் பணிகளும் செய்யப்படும். இது திருப்பூர் மாநகரத்தை பசுமை மாநகரமாக மாற்ற வழி வகுக்கும்.

### திருப்பூர் மாநகராட்சி அழகுபடுத்துதல்

திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள போக்குவரத்து சிக்னல் ரவுண்டானா மற்றும் ரவுண்டானா சந்திப்புகளில் உள்ள சிறிய அழகிய பூங்காக்கள், நீரூற்றுகள் வண்ண விளக்குகள் அமைத்து பராமரிக்க தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பங்களிப்புடன் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



### PM-SVANidhi சாலையோர வியாபாரிகளுக்கு வாழ்வாதார திட்டம்

திருப்பூர் மாநகராட்சி, PMSVANIDHI திட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் (NULM) சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டைகள் மற்றும் வங்கிகள் மூலம் கடன்கள் வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நேர்வில்

திருப்பூர் மாநகராட்சி 4 மண்டலங்களுக்கு உட்பட்ட பகுதிகளில்




சாலையோர வியாபாரிகள் விவரங்கள் கணக்கெடுக்கப்பட்டு சுமார் 7000 சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 12,671 நபர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் வங்கிகள் மூலம் கடன்உதவிகள் பெறுவதற்கு மாநகராட்சி மூலம் பரிந்துரைசெய்யப்பட்டுள்ளது

மேலும், நகர விற்பனைக்குழு அமைத்து அதன் மூலம் மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறில்லாத வண்ணம் இலாபகரமான விற்பனை மண்டலங்கள் (Vending zones) அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பூங்காக்கள், திறவிடங்கள் மற்றும் விளையாட்டு திடல்கள்

திருப்பூர் மாநகராட்சி சொத்து பதிவேட்டில் (Asset Register) மாநகராட்சி எல்லைகளுக்குட்பட்ட 204 பூங்காக்கள் (Parks), 174 திறவிடங்கள் (OSR), 145 மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்கள், 7 விளையாட்டு திடல்கள் (Play Field) ஆகியவை நில அளவை விவரங்களோடு பதிவு செய்யப்பட்டு வருகிறது. இந்நேர்வில், இந்திய அரசு அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் மாநகர நிர்வாக இயக்குனரகம் வழியாக ஊக்கத்தொகையாக (Incentive) ரூ.5.00 கோடி வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி 420 எண்ணிக்கையிலான பூங்காக்கள், திறவிடங்கள் மற்றும் விளையாட்டு திடல்களின் விவரங்கள் நகராட்சி நிர்வாக இயக்குனரகத்திற்கு அனுப்பப்பட்டு அரசிதழில் அறிவிக்கை செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இதனால் மாநகராட்சிக்கு சொந்தமான சொத்துக்களை எளிதில் கண்டறியவும், அவற்றில் ஆக்கிரமிப்புகள் ஏதும் நிகழா வண்ணம் கண்காணித்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்



## ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பொது இடங்கள், சாலைகள், நடைப்பாதைகளிலுள்ள தற்காலிக ஆக்கிரமிப்புகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காக்கள் (Parks), திறவிடங்கள் (OSR), விளையாட்டு திடல்கள் (Play Field) ஆகியவற்றில் அனுமதியின்றி அமைந்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி மாநகராட்சி சொத்துகள் மீட்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு வரையிலும் 2331 எண்ணிக்கையிலான நீர்நிலை மற்றும் தற்காலிக ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு அவற்றில் 1901 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது. மீதமுள்ள 430 ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்படும்.



## மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்குதல்

திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஜல்சக்தி அபியான் என்ற திட்டத்தின்கீழ் ஜல் சஞ்சய் ஜல் பாகிதாரி என்ற முன்முயற்சியின்கீழ் 10,000 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட வேண்டும் என மத்திய அரசால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி 2100 எண்ணிக்கையிலான அரசு கட்டிடங்கள், மாநகராட்சி கட்டிடங்கள் மற்றும் தனியார் கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மீதமுள்ள கட்டமைப்புகளை மே 2026-க்குள் முடித்து அரசின் ஊக்குவிப்பு தொகையாக ரூ.2.00 கோடி பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தை பொது மக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் முன்னெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



## கண்ணாடியிழை வடங்கள் வரன்முறைபடுத்துதல்

திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு அரசு கேபிள், தனியார் கேபிள் நிறுவனங்கள் மற்றும் தொலை தொடர்பு நிறுவனங்கள் மாநகரின் பல்வேறு சாலைகளின் மையத் தடுப்புகள் மற்றும் தெருவிளக்கு கம்பங்களில் (Street light Pole) இழை வடங்களை (Cable Wires) அமைக்கப்பட்டுள்ளது. சாலைகளின் மையத்தடுப்புகளில் (Centre Median) உள்ள கேபிள் வடங்களின் மூலம் சாலைகளில் செல்லும் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுவதாக போக்குவரத்து காவல் துறை மற்றும் பொது மக்களிடமிருந்து புகார்கள் பெறப்பட்டதன் அடிப்படையில் இப்பணிகளை வரன்முறைப்படுத்த ஏதுவாக அரசு கேபிள், தனியார் கேபிள் நிறுவனங்கள் மற்றும் தொலைத் தொடர்பு

நிறுவனங்களுடன் மாநகராட்சி அலுவலகத்தில் கலந்தாலோசனை கூட்டங்களானது 07-11-2025, மற்றும் 13-11-2025 ஆகிய தேதிகள் நடத்தப்பட்டு இப்பொருள் தொடர்பாக உரிய பாதுகாப்பு முன்னெச்செரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் 29.01.2026ம் தேதி அன்று திருப்பூர் பல்லடம் சாலை, நஞ்சப்பா பள்ளி சாலை, அவிநாசி சாலை, காங்கயம் சாலை ஆகிய இடங்களில் முறையற்ற இழை வடங்களை துண்டிப்பு (Cable Wires Disconnection) செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும், மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு கேபிள், தனியார் கேபிள் நிறுவனங்கள் மற்றும் தொலைத் தொடர்பு நிறுவனங்கள் தங்களது இழை வடங்களை (Cable Wires) களஆய்வு செய்து சீர்படுத்திடவும், பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் எவ்வித இடையூறு ஏற்படா வண்ணம் உரிய முன்னெச்செரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தினசரி நாளிதழ்கள் வாயிலாக அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.




## இணைப்பு சாலைகள்

பெருமாநல்லூர் நெடுஞ்சாலைத்துறை சாலை மும்மூர்த்தி நகர் கிழக்கு டீச்சர்ஸ் காலனி முதல் எஸ்.டி.கம்பெனி சாலை வழியாக போயம்பாளையம் பகுதியை இணைக்கும் சுமார் 250 மீட்டர் தொலைவிலான சாலை இணைப்பு பணிகள் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.



பிச்சம்பாளையம் லட்சுமி நகர் முதல் புதியதாக கட்டப்பட்டு வரும் நல்லாறு உயர்மட்ட மேம்பாலம் மற்றும் ராஜா நகர் வழியாக பெருமாநல்லூர் நெடுஞ்சாலையினை இணைக்கும் சுமார் 330

மீட்டர் தொலைவிலான சாலை இணைப்பு பணிகள் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

பெருமாநல்லூர் நெடுஞ்சாலைத்துறை சாலையில் இருந்து மும்மூர்த்தி நகர் மேற்கு மற்றும் சுகம் கிளப் வழியாக பூண்டி ரிங்ரோடு நெடுஞ்சாலைத்துறை சாலை வரையில் சுமார் 1100 மீட்டர் தொலைவிலான இணைப்பு சாலைகள் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## பிரத்தியேக விழிப்புணர்வுச் சின்னம்

திருப்பூர் மாநகராட்சியை 'குப்பையில்லா நகரமாக' மாற்றும் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்ல, ஒரு பிரத்யேக விழிப்புணர்வுச் சின்னம் (Mascot) இந்த பட்ஜெட்டில் அறிமுகப்படுத்தப்படுகிறது:

திருப்பூரின் பொருளாதார முதுகெலும்பான பருத்தியை (Cotton) மையமாகக் கொண்டு, கையில் துடைப்பம் மற்றும் தரம் பிரிக்கப்பட்ட கழிவுத் தொட்டிகளுடன் இந்தச் சின்னம் வடிவமைக்கப்பட்டுள்ளது.




"நெய்தல் நகரம், நேர்த்தியான நகரம்" (Knit city – Neat City) என்ற உன்னத இலக்கை மக்களிடையே கொண்டு செல்வதே இதன் முக்கிய நோக்கமாகும். "Made in Tiruppur" மாநகரத்தின் தனித்துவத்தைப் பறைசாற்றும் வகையில், இச்சின்னம் "Made in Tiruppur" என்ற வாசகத்துடன் தூய்மைப் பணியில் பொதுமக்களின் பங்களிப்பை வலியுறுத்துகிறது. இச்சின்னம் மாநகராட்சியின் அனைத்து விழிப்புணர்வுப் பதாகைகள், சமூக வலைதளப் பக்கங்கள் மற்றும் குப்பை சேகரிப்பு வாகனங்களில் பயன்படுத்தப்பட்டு பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே திருப்பூர் மாநகரை தூய்மையாக பராமரிப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

## திடக்கழிவு மேலாண்மை மற்றும் செயல்பாட்டு நிதி ஒதுக்கீடு

திருப்பூர் மாநகராட்சியின் 60 வார்டுகளிலும் நாளொன்றுக்கு சராசரியாக 573.55 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன. இதில் 258 மெட்ரிக் டன் மக்கும் கழிவுகளாகவும், 315.55 மெட்ரிக் டன் மக்காத கழிவுகளாகவும் தரம் பிரிக்கப்படுகின்றன. குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களில் இருந்து திடக்கழிவுகளைச் சேகரித்து, மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட செயலாக்க மையங்களுக்குக் கொண்டு செல்லும் பணி, அயலாக்கமுறையில் தி/வா.ஸ்ரீனிவாஸ் திடக்கழிவு மேலாண்மை நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. டன் ஒன்றுக்கு ரூ. 4,621/– என்ற வீதத்தில், ரூ.112 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூன்றாண்டு ஒப்பந்தத்தில் இது இறுதி ஆண்டு ஆகும்.



## நீதிமன்ற வழிகாட்டுதல்கள் மற்றும் சட்ட ரீதியான செயல்பாடுகள்

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு எதிராக தொடரப்பட்ட நீதிப்பேராணை மனு WP.No.37431/2025–ன் இடைக்கால உத்தரவிற்கிணங்க, பாறைக்குழிகளில் குப்பை கொட்டும் நடைமுறை முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த தடையின் காரணமாக மாநகரின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட அசாதாரண கழிவு தேக்கத்தைச் சீர்செய்யவும், பொது சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் போர்க்கால அடிப்படையில் மாற்று நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச்சட்டப் போராட்டங்களை மாநகராட்சி தரப்பில் திறம்பட எதிர்கொள்ளவும், மூத்த வழக்கறிஞர்களின் சட்ட ஆலோசனைகள் மற்றும் நீதிமன்றக் கட்டணங்களுக்காகவும் 2025–2026 நிதியாண்டில் ரூ. 10.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### நகராட்சி நிர்வாக இயக்குநர் (DMA) அவர்களின் ஆய்வு மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்கள்

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவைத் தொடர்ந்து, மாநகராட்சியில் நிலவிய அசாதாரண சூழ்நிலையை முன்னிட்டு, திடக்கழிவு மேலாண்மைப் பணிகளைச் சீரமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் 14.12.2025 முதல் 16.12.2025 வரை நேரடி கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.




திடக்கழிவு மேலாண்மைப் பணிகளைத் துல்லியமாக கண்காணித்து, குப்பை உருவாகும் இடங்களிலேயே 100% தரம் பிரித்து சேகரிக்கப்படுவதை உறுதி செய்ய 12 உயர்நிலை மேற்பார்வை அலுவலர்கள் மற்றும் 60 வார்டுகளுக்கும் தலா ஒரு வார்டு ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்பட்டு 24

மணிநேர கண்காணிப்பை உறுதி செய்ய பிற மாநகராட்சிகளிலிருந்து 10 சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் 2 சுகாதார அலுவலர்கள் அயற்பணி அடிப்படையில் வரவழைக்கப்பட்டு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் 24 நுண் உரமாக்கல் மையங்களின் தடையற்ற செயல்பாட்டிற்கு 'வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம்' (AMC) மேற்கொள்ள ரூ.46.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், பழுதான 20 பேட்டரி வாகனங்களை (BOV) உடனடியாகச் சீரமைக்கவும், கூடுதலாக 30 புதிய வாகனங்களைப் பணியமர்த்தவும் தி/வா.ஸ்ரீனிவாஸ் திடக்கழிவு மேலாண்மை ஒப்பந்த நிறுவனம் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திருப்பூர் மாநகராட்சியின் உலர் கழிவு மேலாண்மையைத் தரம்



உயர்த்தும் நோக்கில், நாளொன்றுக்கு தலா 50 டன் திறன் கொண்ட 3 புதிய நவீன வள மீட்பு மையங்கள் (MRF) அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து ரூ. 384.18 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 2 மையங்கள் 15–வது மத்திய நிதிக்குழு (15th CFC) மானியத்தின் மூலமும், 1 மையம் மாநகராட்சியின் பொது நிதியின் (General Fund) மூலமும் செயல்படுத்தப்பட உள்ளன.

மேலும், இம்மையங்களின் செயல்பாட்டிற்காக ரூ.89.15 இலட்சம் மதிப்பீட்டில் கனரக அரவை இயந்திரமும் (Heavy Shredder), ரூ. 69.75 இலட்சம் மதிப்பீட்டில் பெய்லிங் இயந்திரமும் (Baling Machine) கொள்முதல் செய்யப்பட உள்ளன. இப்பணிகளின் தடையற்ற செயல்பாட்டினை உறுதி

செய்ய, 3 ஆண்டுகால வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) மற்றும் முறையான மனிதவள மேலாண்மைக்கான நிதி ஒதுக்கீடும் இந்த பட்ஜெட்டில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## இடுவாய் தற்காலிக திடக்கழிவு சேமிப்பு மையக் கட்டமைப்பு



திருப்பூர் மாநகராட்சியில் நிலவும் அசாதாரண சுகாதார சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் 17.10.2025 மற்றும் 09.12.2025 தேதியிட்ட உத்தரவுகளின் அடிப்படையில், இடுவாய் கிராமத்தில் மாநகராட்சிக்குச் சொந்தமான 9.21 ஏக்கர் நிலப்பரப்பில் தற்காலிகத் திடக்கழிவு சேமிப்பு மையம் நிறுவப்பட்டுள்ளது.

இம்மையத்தினைத் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் (TNPCB) விதிகளுக்கு உட்பட்டு, அறிவியல் பூர்வமாகச் செயல்படுத்த மேற்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்புப் பணிகள் பின்வருமாறு

## கழிவு நீர் மேலாண்மை, பாதுகாப்பு மற்றும் மின்விளக்கு வசதிகள்

நிலத்தடி நீர் பாதிக்கப்படாமல் இருக்க, HDPE ஷீட் (1.5mm HDPE Sheet) கொண்டு தரைத்தளம் மற்றும் கழிவு நீர் சேகரிப்புத் தொட்டிகள் (Collection Tank) அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக Phase–I மற்றும் Phase–II ஆகிய இரண்டு கட்டங்களிலும் சேர்த்து சுமார் ரூ. 161.30 இலட்சம் நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

கழிவு நீர் வழிந்தோட ஏதுவாக மழைநீர் வடிகால் (SWD) மற்றும் ஆர்.சி.சி கல்வெட்டுகள் (RCC Culvert) அமைக்கப்பட்டுள்ளன. மையத்தைச் சுற்றி

தடுப்புகள் (Barricading) மற்றும் பாதுகாப்பாளர் அறை (Watchman Shed) அமைக்க ரூ. 71.91 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மையத்தின் செயல்பாடுகளை இரவு நேரங்களிலும் கண்காணிக்கத் தேவையான மின்விளக்கு வசதிகள் (Street Lights) ரூ. 11.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன. மையத்தின் பயன்பாட்டிற்காகப் புதிய ஆழ்துளைக் கிணறு (Borewell), 7.5 HP மோட்டார் பம்ப்செட், 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் தொட்டி மற்றும் பம்ப் ரூம் ஆகியவை ரூ. 12.80 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளன.

இடுவாய் மையத்தின் முதற்கட்டப் பணிகளுக்காக (Phase–I) ரூ. 240.51 இலட்சம் நிதியும், இரண்டாம் கட்டப் பணிகளுக்காக (Phase–II) ரூ. 125.20 இலட்சம் நிதியும் என மொத்தம் ரூ. 365.71 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீதிமன்ற உத்தரவின்படி, இம்மையம் தற்காலிகமாக மட்டுமே பயன்படுத்தப்படும் என்றும், நிரந்தர செயலாக்க மையம் அமைக்கப்பட்டவுடன் இங்கிருக்கும் குப்பைகள் அறிவியல் பூர்வமாக அகற்றப்பட்டு, இவ்விடம் பழைய நிலைக்குக் கொண்டு வரப்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**நுண் உரமாக்கல் மையங்களின் (MCC) செயல்பாடுகள், இயக்குதல், ஆண்டு பராமரிப்பு மற்றும் இயற்கை உர விநியோகம்**

திருப்பூர் மாநகராட்சியில் சேகரிக்கப்படும் மக்கும் கழிவுகளை அந்தந்த மண்டலங்களிலேயே மேலாண்மை செய்யும் பரவலாக்க முறை (Decentralized SWM) வலுப்படுத்தப்பட்டுள்ளது. இதன் செயல்பாடுகள் பின்வருமாறு

மாநகராட்சி முழுவதும் நிறுவப்பட்டுள்ள 28 நுண் உரமாக்கல் மையங்களில், 25 மையங்களில் 15 வது மத்திய நிதிக்குழு மானியத்தின் கீழ்

மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முழு செயல்திறனுடன் இயங்கி வருகின்றன.

### மக்கும் கழிவு செயலாக்கம்

இம்மையங்கள் மூலம் நாளொன்றுக்குச் சராசரியாக 120 மெட்ரிக் டன் ஈரக்கழிவுகள் அறிவியல் பூர்வமான முறையில் உரமாக்கப்படுகின்றன. இதன் மூலம் நகரின் 45% மக்கும் கழிவுகள் இதரக் கழிவுகளுடன் கலக்காவண்ணம் தடுக்கப்படுகின்றன பதப்படுத்தப்பட்ட ஈரக்கழிவுகளிலிருந்து இயற்கை உரம் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த ஜனவரி–2026 மாதத்தில் மட்டும் சுமார் 1,972 மெட்ரிக் டன் ஈரக்கழிவுகள் உரமாக மாற்றப்பட்டுள்ளன. உற்பத்தி செய்யப்படும் உரங்கள், மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. MCC மையங்களில் கழிவுகளை விரைவாகத் தரம் பிரித்து அரைக்க, கூடுதலாக 12 புதிய அரவை (Shredder) இயந்திரங்கள் நிறுவிட இந்த பட்ஜெட்டில் உறுதி செய்யப்பட்டுள்ளது.



### மறுசுழற்சி மையம் கட்டுதல் (Resource recovery centre)

திருப்பூர் மாநகராட்சி பகுதியில் நிலவி வரும் குப்பை பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் பொது நிதி மற்றும் 15வது மத்திய நிதிக்குழு மான்யத்தின் கீழ் ரூ.1160.98 இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை கோவில் வழி, ஜே.ஜே நகர் மற்றும் 15 வேலம்பாளையம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ள அரவை இயந்திரத்துடன் கூடிய 50 TPD கொள்ளளவு கொண்ட மறுசுழற்சி மையங்கள்

(Resource recovery centre) அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதல் கட்டமாக ஜே.ஜே. நகர் பகுதி மற்றும் கோவில் வழி பகுதிகளில் புதியதாக குப்பைகளை தரம் பிரிக்கும் மையம் அமைத்து மாநகராட்சி பகுதிகளில் சேககமாகும் குப்பைகளை தரம் பிரிக்கும் இயந்திரம் மூலம் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளாக பிரிக்கப்பட்டு மக்கும் குப்பைகளை அரவை இயந்திரம் மூலம் உரமாக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள மக்காத குப்பைகளை மறுசுழற்சி மையம் மற்றும் சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பி வைத்தல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக புதியதாக ரூ.184.00 இலட்சம் மதிப்பீட்டில் 15 இலகுரக வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## நுண்ணுரமாக்கும் மையம்–இயக்குதல் &பராமரித்தல் (Micro Compost centre)

மாநகராட்சிக்கு உட்பட்ட 28 நுண்ணுரமாக்கும் மையங்களில் ரூ.170.00 இலட்சம் மதிப்பீட்டில் இயந்திரங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.368.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆண்டு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தலா ஒரு நுண்ணுரமாக்கும் மையத்திற்கு 4 நபர்கள் வீதம் 96 நபர்களை வெளிச்சந்தை முறையில் பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



## நுண்ணுயிர் உரமாக்கல் மையங்களின் (MCC) இயக்குதல் மற்றும் ஆண்டு பராமரிப்பு (AMC)

இம்மையங்களில் உள்ள காய்கறி கழிவுகளை அரைக்கும் இயந்திரங்கள் (Shredder), கன்வேயர் பெல்ட்கள் (Conveyor Belt), சல்லடை

இயந்திரங்கள் மற்றும் மின் இயக்கிகளில் (Motors) ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகளை உடனுக்குடன் சரிசெய்ய, முதன்முறையாக ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் (Annual Maintenance Contract) முறை அறிமுகப்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு 5 மெட்ரிக் டன் திறன் கொண்ட மையத்திற்கும் தலா 4 பணியாளர்கள் வீதம், வெளிமுகமை (Outsourcing) மூலம் பணியாளர்களை நியமித்து, கழிவுகளைப் பெறுதல் முதல் உரங்களைச் சாக்குப் பைகளில் நிரப்புவது வரையிலான பணிகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.



இயந்திரங்களின் பழுது நீக்கம், உதிரிபாகங்கள் கொள்முதல் மற்றும் பணியாளர் ஊதியம் உள்ளிட்ட ஒட்டுமொத்த செயல்பாட்டுப் பராமரிப்பிற்காக ஓராண்டிற்கு 3 மையங்களுக்கு ரூ.46.00 இலட்சம் வீதம் 24 மையங்களுக்கு மொத்தம் ரூ. 368.00 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி (AS) கோரப்பட்டு, நிதி உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், இயந்திரக் கோளாறுகளால் கழிவுச் சேகரிப்பில் ஏற்படும் தொய்வு முழுமையாகத் தவிர்க்கப்பட்டு, மாநகராட்சியின் பொது சுகாதாரம் மேம்படுவதுடன், இயற்கை உர உற்பத்தியும் தடையின்றி நடைபெறுவது உறுதி செய்யப்படுகிறது.

### பழைய கழிவுகள் மேலாண்மை செய்வதற்கு இயந்திரங்கள் நிறுவுதல் (TROMMEL)

மாநகரின் பல்வேறு பகுதிகளில் தேங்கியிருந்த சுமார் 42,000 மெட்ரிக் டன் பழைய கழிவுகளை (Legacy Waste) அறிவியல் பூர்வமாக அப்புறப்படுத்த

நான்கு தற்காலிகச் சேமிப்பு மையங்கள் உருவாக்கப்பட்டு, பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கோவில்வழி மற்றும் நெருப்பெரிச்சல் மையங்கள்: * கோவில்வழி மையத்தில் ட்ரோமல் இயந்திரம் நிறுவப்பட்டு கழிவுகள் தரம் பிரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நெருப்பெரிச்சல் மையத்தில் 15,400 சதுர அடி பரப்பளவில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணிகள் நிறைவடைந்து, தற்போது ட்ரோமல் இயந்திரம் நிறுவும் பணிகள் இறுதிக்கட்டத்தில் உள்ளன.

இம்மையங்களில் இயந்திரங்கள் மற்றும் கழிவுகளைப் பாதுகாப்பாக வைக்க பிரத்யேகக் கொட்டகைகள் (Shed) அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ட்ரோமல் இயந்திரங்கள் மூலம் சலித்து எடுக்கப்படும் கழிவுகளில், மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்கள் தனியாகப் பிரிக்கப்பட்டு மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகின்றன. மறுசுழற்சி செய்ய இயலாத எரிக்கக்கூடிய கழிவுகள் (RDF), அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு எரிபொருளாக அனுப்பப்படுகின்றன. இதுவரை 17.7 மெட்ரிக் டன் கழிவுகள் அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு வெற்றிகரமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.




கனரக அரவை இயந்திரம் (Heavy Shredder) ட்ரோமல் மூலம் பிரிக்கப்படும் கழிவுகளைச் சிறிய துண்டுகளாக அரைக்க ரூ.89.15 இலட்சம் மதிப்பீட்டில் புதிய இயந்திரம் நிறுவப்பட உள்ளது.

பெய்லிங் இயந்திரம் (Baling Machine): பிரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளை அழுத்திச் சுருக்கிப் போக்குவரத்து செய்ய ஏதுவாக ரூ.69.75 இலட்சம் மதிப்பீட்டில் நவீன இயந்திரம் கொள்முதல் செய்யப்பட உள்ளது.

நெருப்பெரிச்சல் உள்ளிட்ட நான்கு மையங்களிலும் தளம் அமைத்தல், வேலி அமைத்தல் மற்றும் பாதுகாப்பு வசதிகளுக்காக மொத்தம் ரூ. 304.00 இலட்சம் நிதி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. நெருப்பெரிச்சல், கோவில்வழி, வேலம்பாளையம் மற்றும் சுண்டமேடு ஆகிய நான்கு மையங்களிலும் ட்ரோமல் பணிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மொத்தம் ரூ. 304.00 இலட்சம் நிதி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதில் கீழ்க்கண்ட பணிகள் அடங்கும்

- கான்கிரீட் தளம் அமைத்தல்: ரூ. 129.50 இலட்சம்.
- பாதுகாப்பு வேலி அமைத்தல் (Fencing): ரூ. 73.50 இலட்சம்.
- தெருவிளக்கு மற்றும் பாதுகாப்பு வசதிகள்: ரூ. 76.00 இலட்சம்.
- இதர இயந்திரங்கள் வாடகை: ரூ. 25.00 இலட்சம்.

### உயிரி எரிவாயு (Bio-methanation) ஆலை & Bio-CNG பெருந்திட்டங்கள்

மாநகராட்சி உணவு கழிவுகள், காய்கறி சந்தை மற்றும் உணவகங்களில் சேகரமாகும் 10 மெட்ரிக் டன் ஈரக்கழிவுகளைக் கையாளும் உயிரி எரிவாயு ஆலை (Bio-methanation Plant), நகராட்சி நிர்வாக இயக்குநரின் அறிவுறுத்தலின்படி போர்க்கால அடிப்படையில் சீரமைக்கப்பட்டு தற்போது முழுத் திறனுடன் இயங்கி வருகிறது. இவ்வாலையின் தொடர் செயல்பாட்டினை உறுதி செய்ய 3 ஆண்டுகால இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஒப்பந்தம் (O&M with AMC) மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நாளொன்றுக்கு 10 மெட்ரிக் டன் கழிவுகள் அறிவியல் பூர்வமாக அழிக்கப்பட்டு, பசுமை எரிசக்தி உற்பத்தி செய்யப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

குப்பைகளைத் தரம் பிரித்தல் குறித்த துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படுவதுடன், வார்டு வாரியாகக் கழிவு உற்பத்தியைக் கணக்கிட 60 வார்டு ஒருங்கிணைப்பாளர்களுக்கு எடை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.



திருப்பூர் மாநகராட்சியின் 'கழிவிலிருந்து எரிசக்தி' (Waste to Energy) கொள்கையின் கீழ், ஈரக்கழிவுகளை மதிப்பு கூட்டிய எரிபொருளாக மாற்றும் திட்டங்கள் கீழ்க்கண்டவாறு பட்ஜெட்டில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன:

- **10 மெ.டன் உயிரி எரிவாயு ஆலை (Bio-Methanation Plant)**

மாநகராட்சியில் ஏற்கனவே அமைக்கப்பட்ட 10 மெட்ரிக் டன் திறன் கொண்ட உயிரி எரிவாயு ஆலை, நகராட்சி நிர்வாக இயக்குநர் (DMA) அவர்களின் அறிவுறுத்தலின்படி போர்க்கால அடிப்படையில் சீரமைக்கப்பட்டது. தற்போது இவ்வாலை முழு உற்பத்தித் திறனுடன் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் காய்கறிச் சந்தை மற்றும் உணவகங்களில் இருந்து சேகரிக்கப்படும் உணவுக்கழிவுகள் மற்றும் ஈரக்கழிவுகள் தினமும் எரிவாயுவாக மாற்றப்படுகிறது, இவ்வாலையின் தொடர் செயல்பாட்டிற்கான ஆண்டு பராமரிப்பு (O&M) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **200 TPD Bio-CNG ஆலைத் திட்டம்**

மாநகராட்சியில் சேகரமாகும் ஈரக்கழிவுகளை முழுமையாகக் கையாள ரூ. 57.84 கோடி மதிப்பீட்டில் "வடிவமைப்பு, உருவாக்கம், நிதி, இயக்குதல் மற்றும் மாற்றுதல்" (DBFOT) முறையில் அமையவிருக்கும் அதிநவீன Bio-



CNG ஆலைக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டமானது தி/வா. மகா சக்தி என்கான் பிரைவேட் லிமிடெட் (M/s. Maha Sakthi Encon Pvt. Ltd) என்ற நிறுவனத்தின் மூலம் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP Mode) செயல்படுத்தப்பட உள்ளது. பல்லடத்தில் இதற்கான 8.19 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, தற்போது இத்திட்டத்திற்கான தொழில்நுட்பச் சரிபார்ப்பு மற்றும் ஒப்புதலுக்காகத் தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்கு (TNIDB) அனுப்பப்பட்டு, அனுமதி பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு பணி துவங்கும் நிலையில் உள்ளது.

**தூய்மைப் பணி வாகன கட்டமைப்பு மற்றும் நவீனமயமாக்கல்**

மாநகரின் 60 வார்டுகளிலும் திடக்கழிவு சேகரிப்பு மற்றும் போக்குவரத்துப் பணிகளைத் தொய்வின்றி மேற்கொள்ள, தற்போதுள்ள வாகனங்களைப் பராமரிப்பதோடு, நவீன புதிய வாகனங்களைக் கொள்முதல் செய்யவும் இந்த பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை வலுப்படுத்த, 15-வது நிதியாண்டுக்குழு மானியத்தின் கீழ் கீழ்க்கண்ட புதிய வாகனங்களைக் கொள்முதல் செய்ய டெண்டர் விடப்பட்டு, பணிகள் இறுதி செய்யப்பட்டுள்ளன:

மண்டலம் 1 மற்றும் 2: குப்பைகளை ஏற்றிச் செல்லும் வசதி கொண்ட 7 புதிய இலகுரக வாகனங்கள் (LCV) கொள்முதல் செய்ய ரூ. 85.75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மண்டலம் 3 மற்றும் 4 இப்பகுதிகளுக்காக 8 புதிய இலகுரக வாகனங்கள் (LCV) கொள்முதல் செய்ய ரூ. 97.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அறிவியல் பூர்வமான கழிவுத் தணிக்கை மற்றும் வழித்தட மறுசீரமைப்பு**

மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைச் செயல்பாடுகளைத் தரவு அடிப்படையிலும் (Data-driven), பொருளாதார ரீதியாகவும் மேம்படுத்த கீழ்க்கண்ட விரிவான திட்டங்கள் பட்ஜெட்டில் முன்மொழியப்பட்டுள்ளன:

மக்கள் தொகை, வீடுகள், கடைகள், வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகளின் எண்ணிக்கைகள் மற்றும் 60 வார்டுகளிலும் உற்பத்தியாகும் குப்பைகளின் தன்மை (மக்கும் குப்பை, உலர் கழிவு, அபாயகரமான கழிவு) மற்றும் அதன் சரியான அளவைக் கண்டறிய ஒரு விரிவான 'கழிவுத் தணிக்கை' வார்டு ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கென ஒவ்வொரு வார்டுக்கும் பிரத்யேக எடை இயந்திரங்கள் வழங்கப்பட்டு, தினசரி சேகரிப்பு அளவுகள் துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

கழிவுத் தணிக்கையைத் துல்லியமாக மேற்கொள்ள, வார்டுக்கு ஒன்று



என்ற வீதத்தில் 60 புதிய மின்னணு எடை இயந்திரங்கள் (50 கிலோ கொள்ளளவு) மாநகராட்சி பொது நிதியிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

இப்பணிக்கு மொத்தம் ரூ. 1,86,204/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. பணியின் அவசர அவசியம் கருதி,

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)–ன் கீழ் ஆணையாளர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி இதற்கான நிர்வாக அனுமதி 16.12.2025 அன்று பெறப்பட்டது.

**தூய்மைப் பணியாளர் நலன் மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டுத் திட்டம்**

மாநகரின் சுகாதாரத்தைப் பாதுகாப்பதில் தூய்மைப் பணியாளர்களின் பங்கு ஈடு இணையற்றது. அதிகாலை முதலே களப்பணியில் ஈடுபடும் அவர்களின் உடல்நலன் மற்றும் வாழ்வாதாரத்தைப் பேணுவதை மாநகராட்சி தனது முதன்மைக் கடமையாகக் கருதுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தின்" கீழ், திருப்பூர் மாநகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு நாள்தோறும் உணவு வழங்க அரசாணை (4ப) எண்.56 (நாள்: 21.11.2025) மூலம் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

இத்திட்டமானது சோதனை அடிப்படையில் மண்டலம் 1 இல் 02.01.2026 அன்று தொடங்கப்பட்டு 765 தூய்மைப் பணி களப்பணியாளர்கள் பயன் பெற்று வந்தனர், தற்போது 09.02.2026 முதல் மாநகரம் முழுவதும் முழுமையாக விரிவுபடுத்தப்பட்டு 3173 தூய்மைப் பணி களப்பணியாளர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.



இத்திட்டத்தைச் செயல்படுத்த மூன்றாண்டு காலத்திற்கு தி/வா. எல்.சி.சி மில் பிரைவேட் லிமிடெட் (M/s. LCC MILL PRIVATE LIMITED) என்ற தகுதியான ஒப்பந்த நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ஆண்டொன்றுக்கு ரூ.5.00 கோடி வீதம், மூன்று ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வீடுகளுக்கான குப்பைத் தொட்டிகள் வழங்கல் மற்றும் தரம் பிரித்தல் ஊக்குவிப்பு**




திருப்பூர் மாநகராட்சியை 'குப்பையில்லா நகரமாக' மாற்றும் இலக்கை அடைய, குப்பைகளை அவற்றின் உற்பத்தி இடத்திலேயே தரம் பிரிப்பதை ஊக்குவிக்கும் வகையில், 15–வது மத்திய நிதிக்குழு (15th Central Finance Commission – CFC) மானியத்தின் கீழ் ரூ. 105.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு , 10 லிட்டர் கொள்ளளவு கொண்ட 70,000 புதிய குப்பைத் தொட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு மாநகராட்சியின் 60 வார்டுகளில் உள்ள குடியிருப்புகளுக்கு ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், சமையலறை மற்றும் உணவுப் பொருட்கள் போன்ற மக்கும் தன்மை கொண்ட ஈரக்கழிவுகளைச் சேகரிக்க பச்சை வண்ணத் தொட்டிகளும் (Green Bin), நெகிழி, காகிதம் மற்றும் உலோகம் போன்ற மறுசுழற்சி செய்யக்கூடிய உலர்கழிவுகளைச் சேகரிக்க நீல வண்ணத் தொட்டிகளும் (Blue Bin) வழங்கப்படுகின்றன. வரும் காலங்களில் குப்பைத் தொட்டிகளைத் தடையின்றி மாநகராட்சி பகுதியல் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம், தூய்மைப்

பணியாளர்களிடம் குப்பைகளைத் தரம் பிரித்து ஒப்படைக்கும் பழக்கம் மக்களிடையே மேம்படுத்தப்படுவதுடன், மாநகராட்சியின் குப்பை மேலாண்மைச் செலவினமும் பெருமளவு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பரப்புரையாளர்கள் மூலம் விழிப்புணர்வு**

சுமார் 30 பயிற்சி பெற்ற பரப்புரையாளர்கள் (Animators) மூலம் வீடு வீடாகச் சென்று 'மஞ்சள் பை' பயன்பாட்டின் அவசியம் மற்றும் குப்பைகளை ஈரக்கழிவு, உலர் கழிவுகளாகப் பிரிப்பது குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, அவர்கள் மூலம் இச்செய்தி பொதுமக்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதற்கென, துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்க ரூ.10.00 இலட்சம் பொது நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது.

**கல்வி நிறுவனங்களில் விழிப்புணர்வு**

தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம்' மூலம் 72பள்ளிகளில் உள்ள 25000 க்கும் மேற்பட்ட மாணவர்களிடையே திடக்கழிவுகளை தரம் பிரித்து வழங்குதல்



**விழிப்புணர்வுப் பணிகள் (IEC) மற்றும் 'மஞ்சள் பை' பயன்பாடு ஊக்குவிப்பு**

திருப்பூர் மாநகராட்சியை நெகிழிப் பயன்பாடற்ற (Plastic Free City) மாநகராட்சியாக மாற்றவும், திடக்கழிவுகளை தரம் பிரிப்பது குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் கீழ்க்கண்ட திட்டங்கள் பட்ஜெட்டில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன

## மஞ்சள் பை தானியங்கி இயந்திரங்கள்

நெகிழிப் பைகளுக்கு மாற்றாகத் துணிப் பைகளின் பயன்பாட்டை எளிதாக்க, மாநகரின் முக்கியப் பொது இடங்களில் ரூ. 13.50 இலட்சம் மதிப்பீட்டில் மஞ்சள் பை தானியங்கி இயந்திரங்கள் நிறுவப்பட உள்ளன. இதன் விவரங்கள் வருமாறு




- 500 பைகள் கொள்ளளவு கொண்ட இயந்திரங்கள் நிறுவ ரூ. 6.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.
- 100 பைகள் கொள்ளளவு கொண்ட இயந்திரம் நிறுவ ரூ. 4.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 300 பைகள் கொள்ளளவு கொண்ட இயந்திரங்கள் நிறுவ ரூ. 3.50 இலட்சம் நிதி உறுதி செய்யப்பட்டுள்ளது.

## செயற்கை நுண்ணறிவு (AI) கேமராக்கள் மூலம் தீவிரக் கண்காணிப்பு மற்றும் அமலாக்கம்

மாநகரின் பொது இடங்களில் குப்பைகள் கொட்டுவதைத் தவிர்க்கவும், 'குப்பை இல்லா மாநகராட்சி' என்ற இலக்கை அடையவும், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த இந்த பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

## கண்காணிப்பு மையங்கள்



மாநகராட்சி முழுவதும் கண்டறியப்பட்டுள்ள 40 மிக முக்கியமான மற்றும் குப்பைகள் அதிகம் சேரும் இடங்களில் (Garbage Vulnerable Points – GVP), அதிநவீன செயற்கை நுண்ணறிவு (AI) வசதி கொண்ட கண்காணிப்பு

கேமராக்கள் ரூ.38.50 இலட்சம் மதிப்பீட்டில் 15 வது நிதிக்குழு மானியத்தின் நிதியின் கீழ் பொருத்தப்பட உள்ளன.

## விதிமீறல்கள் கண்டறிதல்

AI கேமராக்கள் மூலம் பொது இடங்களில் குப்பை கொட்டுபவர்கள், கட்டுமானக் கழிவுகளைக் கொட்டும் வாகனங்கள் மற்றும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துபவர்கள் உடனுக்குடன் கண்டறியப்படுவார்கள்.

கேமராக்கள் மூலம் பெறப்படும் தரவுகளின் அடிப்படையில், விதிமீறுபவர்கள் மீது உடனடி அபராதம் விதிக்கவும், தொடர் விதிமீறல்களில் ஈடுபடும் வாகனங்களைப் பறிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கென வார்டு அளவிலான ஒருங்கிணைப்பாளர்களுக்கு சிறப்பு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான வன்பொருள் கொள்முதல், மென்பொருள் ஒருங்கிணைப்பு மற்றும் மையக் கட்டுப்பாட்டு அறையுடன் இணைக்கும் பணிகளுக்காக ரூ. 38.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் (SOP)

கழிவு சேகரிப்பு முதல் இறுதி மேலாண்மை வரை அனைத்து நிலைகளிலும் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் (Standard Operating Procedures (SOP)) 100% அமல்படுத்தப்படுவதை இந்த பட்ஜெட் உறுதி செய்கிறது.

## சிறப்பு கழிவு மேலாண்மை மற்றும் நவீன இயந்திரங்கள் கொள்முதல்



மாநகராட்சியின் கழிவு மேலாண்மை கட்டமைப்பை நவீனப்படுத்தவும், குறிப்பிட்ட வகை கழிவுகளை அறிவியல் பூர்வமாக அழிக்கவும் கீழ்க்கண்ட இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளன

### நாப்கின் நீற்றுலை (Napkin Incinerator)–



சுகாதாரமான முறையில் கழிவுகளை அப்புறப்படுத்த ஏதுவாக, 4 மண்டலங்களில் 4 நீற்றுலைகள் நிறுவ ரூ.10.60 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### தோட்டக் கழிவு (ம) மரக்கழிவுகளை அரைக்கும் இயந்திரம்

மாநகராட்சிப் பூங்காக்கள், வார்டு தெருக்களில் சேகரமாகும் மரம், கிளைகள் மற்றும் இலை தழைகளை மேலாண்மை செய்ய ரூ. 17.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய தோட்டக்கழிவு மற்றும் மரக்கழிவுகளை அரைக்கும் இயந்திரம் கொள்முதல் செய்யப்பட உள்ளது. இதன் மூலம் தோட்டக் கழிவுகள் உரமாக்கப்படுவது எளிதாக்கப்படும்.



### மண்டல அளவிலான கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் கூட்டுத் திட்டம் (Cluster–based Waste to Energy Project)

திருப்பூர், கோவை மற்றும் ஈரோடு ஆகிய மூன்று மாநகராட்சிகளும் இணைந்து, நாளொன்றுக்கு சுமார் 1200 மெட்ரிக் டன் மக்கும் கழிவுகளைப்

பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் 'மண்டல அளவிலான கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் மெகா திட்டம்' (Cluster-based Waste to Energy Project) இந்த பட்ஜெட்டின் தொலைநோக்கு அடையாளமாக முன்வைக்கப்படுகிறது. 'டாட்டா கன்சல்டிங் இன்ஜினியர்ஸ்' (TATA Consulting Engineers) நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்யப்பட்டு வரும் இத்திட்டம், மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதுடன், பசுமை ஆற்றல் (Green Energy) உற்பத்தி மற்றும் மின் விற்பனை மூலம் கூடுதல் வருவாய் ஈட்டவும் வழிவகை செய்யும்.

## நெகிழி கழிவு மேலாண்மை (Plastic Waste Management)

திருப்பூர் மாநகராட்சியை நெகிழிப் பயன்பாடற்ற நகரமாக மாற்றத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை பிளாஸ்டிக் விதிமீறல்களுக்காக டிசம்பர் 2025 முதல் ஜனவரி 2026 வரையான காலங்களில் 943 கடைகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டு ரூ. 10.10 இலட்சம் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.



7384 கிலோ நெகிழிப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, தூளாக்கப்பட்டு, சிமெண்ட் தொழிற்சலைக்கு எரிபொருளாக அனுப்பப்பட்டுள்ளது.

## சிறப்பு கழிவு சேகரிப்பு முகமைகள்

மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளைத் தரம் உயர்த்தவும், குறிப்பிட்ட வகை கழிவுகளை அறிவியல் பூர்வமாக அப்புறப்படுத்தவும் கீழ்க்கண்ட சிறப்பு முகமைகள் அங்கீகரிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

| வ எண் | கழிவு வகை / பணியின் நோக்கம் | முகமையின் | அங்கீகரிக்கப்பட்ட செயல்பாடுகள் |
|---|---|---|---|
| 1 | தொழிற்சாலைக் கழிவுகள் | M/s. Regain Reprocess | மண்டலம் 1 மற்றும் 2–க்கு உட்பட்ட தொழிற்சாலைகளில் இருந்து உலர்கழிவுகளைச் சேகரித்து செயலாக்கம் செய்தல். |
| 2 | தொழிற்சாலைக் கழிவுகள் | M/s. Infinite Cercle Private Limited | மண்டலம் 3 மற்றும் 4–க்கு உட்பட்ட தொழிற்சாலைகளில் இருந்து உலர்கழிவுகளைச் சேகரித்து செயலாக்கம் செய்தல். |
| 3 | உலர்கழிவு மறுசுழற்சி | M/s. Green Zone Waste Management | தென்னம்பாளையம் சந்தைப்பேட்டை (மண்டலம் 4) உலர்கழிவு மறுசுழற்சி மையத்தை இயக்குதல்; கழிவுகளை மறுசுழற்சி செய்யக்கூடியவை மற்றும் செய்ய இயலாதவை எனத் தரம் பிரித்தல். |
| 4 | கோழிக்கழிவுகள் | M/s. Viki Traders | மண்டலம் 1 முதல் 4 வரை உள்ள இறைச்சிக் கடைகளில் இருந்து கோழிக்கழிவுகளை நேரடியாகச் சேகரித்து இயற்கை உர உற்பத்தி நிலையங்களுக்குக் கொண்டு செல்லுதல். |
| 5 | இரவு நேர உணவகங்கள் | M/s. Srinivas Waste Management | மாநகராட்சிப் பகுதிகளில் இயங்கும் இரவு நேர உணவகங்களில் உருவாகும் கழிவுகளைச் சேகரித்து மேலாண்மை செய்தல். |

**இரவு நேரக் குப்பைச் சேகரிப்பு முறை**

இரவு நேர உணவகங்களில் உருவாகும் குப்பைகள் தி/வா.ஸ்ரீனிவாஸ் திடக்கழிவு மேலாண்மை நிறுவனம் மூலம் சேகரிக்கப்பட்டு மேலாண்மை செய்யப்படுகின்றன.

**திறந்தவெளி குப்பை கொட்டும் இடங்களை மீட்டெடுத்தல் மற்றும் அழகுபடுத்துதல்**

திருப்பூர் மாநகராட்சியின் 'குப்பையில்லா நகரம்' என்ற இலக்கை எய்திட, பொதுமக்களால் திறந்தவெளியில் குப்பைகள் கொட்டப்படும் 331







இடங்கள் (Garbage Vulnerable Points – GVP) கண்டறியப்பட்டு, அங்கு தேங்கியிருந்த கழிவுகள் முழுமையாக அகற்றப்பட்டுள்ளன. அவ்விடங்களில் மீண்டும் குப்பைகள் கொட்டப்படுவதைத் தவிர்க்கும் வகையில், தூய்மை செய்யப்பட்ட பகுதிகள் பச்சை நிற நிழல் வலைகள் (Green Nursery Nets) கொண்டு வேலி அமைக்கப்பட்டு, பாரம்பரிய முறைப்படி கோலங்கள் மற்றும் விழிப்புணர்வு ஓவியங்கள் மூலம் அழகுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், இத்தகைய GVP பகுதிகளில் செடிகள் நடப்பட்டுப் பசுமைத் தளங்களாக மாற்றப்பட்டுள்ளதோடு, அவ்விடங்கள் மீண்டும் அசுத்தமாவதை தடுக்கத் தீவிர கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகளை சுகாதாரமாக பராமரித்தல்

திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டு பகுதிகளில் அரசு மற்றும் மாநகராட்சி தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் மொத்தம் 145 எண்ணிக்கையில் உள்ளது, இங்குள்ள பள்ளி வளாகங்கள் மற்றும் கழிப்பறைகள் சுகாதாரமாக பராமரிக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட பள்ளி மேலாண்மை குழு (School Management Commitee) மூலம் தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் 223 பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு அவர்களுக்கு ஊதியம் சம்பந்தப்பட்ட பள்ளி மேலாண்மை குழு வங்கி கணக்கில் நேரடியாக வழங்கப்பட்டு பள்ளிகள் சுகாதாரமாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி பணிக்கு திருப்பூர் மாநகராட்சி கல்வி வரி (Elementary Education Fund) மற்றும் பொது நிதியிலிருந்து 2025–26ஆம் ஆண்டிற்கு ரூ.72.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2026–27ஆம் ஆண்டிற்கு ரூ. 99.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பள்ளி மாணவர்களுக்கு மாலை நேர சிறப்பு சிற்றுண்டி

பொது தேர்வுக்கு பயிலும் மாணவர்களுக்கு மாலை நேரங்களில் நடைபெறும் சிறப்பு வகுப்பில் சிறப்பு சிற்றுண்டி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## சதுரங்க பயிற்சி

பள்ளி மாணவர்களின் பன்முகதிறமை, சதுரங்கம் மற்றும் தற்காப்பு கலைகளான சிலம்பம் கராத்தே போன்ற சிறப்பு பயிற்சிகள் கோடைகால சிறப்பு பயிற்சியாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அறிவுசார் மையத்தில் தகுந்த பயிற்றுனர்களுடன் இணைந்து மாணவர்களுக்கு IAS, TNPSC, Banking போட்டி தேர்வுகளுக்கு பயிற்சி வழங்கப்படும்.

## தெருநாய்களை கட்டுப்படுத்துதல் (Animal Birth Control)

திருப்பூர் மாநகராட்சியின் தெருநாய்கள் கட்டுப்பாடு மற்றும் நலத் திட்டமானது, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதையும், தெருநாய்களின் எண்ணிக்கையை அறிவியல் பூர்வமாக நிர்வகிப்பதையும் முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஜனவரி 2026-ல் நடத்தப்பட்ட WVS கணக்கெடுப்பின்படி மாநகரில் மொத்தம் 28,550 தெருநாய்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது, இதில்



100% நாய்களுக்கு கருத்தடை செய்வதை இலக்காக கொண்டு செயல்படுத்தப்படவுள்ளது இம்மாநகராட்சியில் ஜனவரி 2022 முதல் டிசம்பர் 2025 வரை மேற்கொள்ளப்பட்ட பணிகளில், மொத்தம் 7,385 தெருநாய்கள் பாதுகாப்பான முறையில் பிடிக்கப்பட்டு, கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டு தடுப்பூசி போடப்பட்டு, மீண்டும் அவை பிடிக்கப்பட்ட இடங்களிலேயே விடப்பட்டுள்ளன.

அரசானை நிலை (4D) எண் 01 கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர்நலத்துறை (AH3) துறை நாள் 17.03.2023 ல் ஒரு தெருநாய்க்கு கருத்தடை செய்து, Anti Rabies Vaccine (ARV) தடுப்பூசி செலுத்திப் பராமரிக்க மற்றும் பிடித்த இடத்திலேயே திரும்பிவிடும் பணிக்கு 1,650/- ரூபாய் செலவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, 2025-2026 ஆம்

நிதியாண்டில் மட்டும் 2,050 தெருநாய்களுக்கு இச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, இதற்காக 33,82,500 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இனிவரும் காலத்தில், ரூ.198.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12,000 தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகளைத் துரிதப்படுத்த, ஏற்கனவே உள்ள தங்கம் மெமோரியல் டிரஸ்ட் உடன் மற்றும் கூடுதலாக 'பிராணி மித்ரன்' அமைப்பும் புதிதாக இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை தினசரி கண்காணிக்க மாநகராட்சி அலவலர்கள், கால்நடை உதவி மருத்துவர், பிரானிவதை தடுப்பு சங்கம் மற்றும் SPCA உறுப்பினர்கள் கொண்ட கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், அறுவை சிகிச்சை அரங்கம் (OT), அறுவை சிகிச்சைக்கு முந்தைய மற்றும் பிந்தைய பராமரிப்பு அறைகள் (Pre–op & Post–op Kennels) உள்ளிட்ட அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த புதிய ஏபிசி (ABC) மையம் அமைக்கப்படவுள்ளது; இதற்கான இடம் தேர்வு செய்யும் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும். பழைய மையங்களைப் பராமரிக்கவும் பழுதுநீக்கவும் ரூ.95.00 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாய் பிடிக்கும் பணிகளைத் திறம்பட மேற்கொள்ள, ஏற்கனவே உள்ள வாகனங்களுடன் கூடுதலாக ₹ 50 இலட்சம் ரூபாய் செலவில் நவீன வாகனங்கள் கொள்முதல் செய்யப்படவுள்ளன. எதிர்காலத்தில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் தலா 1 வாகனங்கள் வீதம் மொத்தம் 4 வாகனங்களைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், பொது சுகாதாரத்தைப் பேணும் வகையில், ஆண்டுதோறும் சுமார் 20,000 நாய்களுக்கு (கருத்தடை செய்யப்படாதவை உட்பட) வெறிநாய்

நோய் தடுப்பூசி (Anti–Rabies Vaccine) செலுத்தப்படும். இவற்றுடன் கால்நடை மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்படும். இவ்வாறு கூடுதல் வாகனங்கள் மற்றும் நவீன மையங்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. மண்டலம் எண் 1 மற்றும் 2–க்குட்பட்ட பகுதிகளின் மேலும், கூடுதல் மையங்கள் அமைத்திட இடங்களை தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்றுவருகிறது.

பொது மக்களின் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு கருதி இப்பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## தூய்மை இந்தியா திட்டம் (SBM)

திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2021 முதல் 2026 வரையுள்ள ஐந்து ஆண்டுகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவு மேலாண்மை பணி குறித்தும், வீடுவீடாகவும் மற்றும் பொதுமக்கள் மத்தியிலும் விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள தூய்மை இந்தியா திட்டம் (U) 2.0 இன் கீழ் 2022 – 2023




முதல் 2025 – 2026 ஆகிய நிதியாண்டுகளில் ரூ.293.96 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இம்மாநகராட்சியில் மண்டலம் எண் 1 முதல் 4 வரையுள்ள பகுதிகளில் மேற்படி பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தனியார் நிறுவனத்தின் மூலம் வெளிக்கொணர்வு முறையி 30 எண்ணிக்கையில் பரப்புரையாளர்கள் 4 எண்ணிக்கையில் மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 எண்ணிக்கையில் ஒருங்கிணைப்பாளரை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் இம்மாநகராட்சியில் தூய்மை இந்தியா

திட்ட பணிகளை மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டு செப்டம்பர் – 2022 முதல் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிகளை மேற்கொள்ள 2025–2026 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ.70.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 2026 – 2027 ஆம் ஆண்டிற்கு ரூ.72.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**மாநகராட்சி பணியாளர்களுக்கு சீருடை மற்றும் காலணி வழங்குதல்**

திருப்பூர் மாநகராட்சியில் பணிபுரியும் மாநகராட்சி நிரந்தர தூய்மை பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சீருடைகள் மற்றும் காலணிகள் புதிதாக வாங்கி வழங்க 2025–26 ஆம் ஆண்டிற்கு ரூ.21.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு இரண்டு ஜோடி சீருடைகள் மற்றும் ஒரு ஜோடி காலணி மற்றும் மாநகராட்சி நிரந்தர ஓட்டுநர்கள் 16 நபர்களுக்கு இரண்டு ஜோடி சீருடைகள் புதிதாக வாங்கி வழங்கப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் நகர சுகாதார செவிலியர்களுகு சீருடை படியும் வழங்குவதற்கு 2026–27ஆம் ஆண்டுக்கு ரூ.22.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்தல்**

திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல், மலேரியா, சிக்கன்குனியா மற்றும் கொசுவினால் பரவும் இதர நோய்களை கட்டுப்படுத்தும் பொருட்டு 2025–26ஆம் ஆண்டில் கொசு புழு உற்பத்தி தடுப்பு பணிக்கு தற்காலிக பணியாளர்கள் (DBC) ஒவ்வொரு மண்டலத்திற்கும்

தினசரி 75 நபர்கள் வீதம் மொத்தம் 300 பணியாளர்களை கொண்டு ஆண்டு முழுவதும் கொசுபுழு உற்பத்தி தடுப்பு பணி மற்றும் அபேட் மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இம்மாநகராட்சி மண்டலம் எண் 1 முதல் 4 வரையுள்ள பகுதிகளில் தினசரி காலை மற்றும் மாலை ஆகிய இரண்டு வேளைகளிலும் அனைத்து வீடுகள் மற்றும் பொது இடங்களில் கொசுபுகை மருந்து அடித்து நல்ல தண்ணீரில் குளோரின் அளவுகளை கண்காணித்தும், தேக்கி வைக்கப்பட்டுள்ள நல்ல தண்ணீரில் மருந்துகளை ஊற்றியும் கொசுப்புழுக்கள் உருவாகமல் கட்டுப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள பணியாளர்கள் ஊதியம் 2026-27ஆம் ஆண்டில் ரூ.345.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



மேலும் இம்மாநகராட்சியில் நோய்களைக் கட்டுப்படுத்த தேவையான கொசுமருந்துகள், (Pyrethrum 2% extract, Temephos Emulsifiable 50 % EC, Bacillus Turingensis Var Israelensis % WP Stain : ABIL) கொசுவலைகள் போன்றவைகளை தமிழ்நாடு அரசு மருந்துவ சேவை கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்ய 2026-27ஆம் ஆண்டிற்கு ரூ.121.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பொதுசுகாதார பணிக்கு கிருமிநாசினிகள் வாங்குதல்

திருப்பூர் மாநகராட்சியில் துப்புரவுப் பணி மற்றும் இதர பொதுசுகாதாரப் பணிகளை மேற்கொள்ள தேவைப்படும் கிருமிநாசினிகளான பிளீச்சிங்பவுடர், நீர்த்த சுண்ணாம்புதூள், லைசால், லெமன்கிராஸ் ஆயில் மற்றும் இதர கிருமிநாசினி மற்றும் மருந்துகளை வாங்க 2025-26ஆம்

ஆண்டிற்கு ரூ.72.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2026-27ஆம் ஆண்டிற்கு ரூ. 85.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தூய்மைப் பணியாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தளவாட சாமான்கள் வழங்குதல்**

திருப்பூர் மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களின் உடல் நலத்தினை கருத்தில் கொண்டு பாதுகாப்பான முறையில் பணிபுரியும் பொருட்டு துப்புரவு பணிக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களான ஒளிரும் மேல்சட்டை, கையுறை, தலைக்கவசம், கம்பூட், மாசுகட்டுப்பாட்டு முககவசம் மற்றும் ரெயின்கோட் போன்றவைகளை புதிதாக வாங்க 2025-26ஆம் ஆண்டிற்கு ரூ.15.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டுள்ளது. மேலும் 2026-27ஆம் ஆண்டுக்கு ரூ. 16.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சியில் துப்புரவு பணிக்கு பயன்படுத்தப்படும் தளவாட சாமான்களான சவுல், மண்வெட்டி, சாக்கடை மண் அள்ளும் கரண்டி, ரோடு கூட்டும் பிரஷ், குப்பைத்தொட்டிகள் மற்றும் இதர தளவாடங்களை வாங்க 2025-26ஆம் ஆண்டிற்கு ரூ.36.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2026-27ஆம் ஆண்டிற்கு ரூ.40.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## அறுவசை சிகிச்சை அரங்கம் புனரமைப்பு பணி

திருப்பூர் மாநகராட்சியில் இயங்கி வரும் TSK கந்தசாமி செட்டியார் அரசு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் பழுதடைந்திருந்த அறுவை சிகிச்சை அரங்கை ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியின் மூலம் புனரமைத்து, பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் காரணமாக நமது மாநகராட்சி சார்ந்த பெண்கள் மற்றும் ஆண்கள் குடும்பக் கட்டுபாட்டு அறுவை சிகிச்சை சேவையினை நமது பகுதியிலேயே பெற்று பயனடைகின்றனர்.



திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் தேசிய நகர்ப்புற திட்டத்தின் கீழ் செயல்படும் அரசு நகர்ப்புற ஆரம்ப மற்றும் துணை சுகாதார நிலையங்கள் – நலவாழ்வு மையங்களில் சிகிச்சை பெற்று பயனடைந்த நபர்கள் மற்றும் தாய்மார்களின் பிரசவம் ஆன விபரங்கள்

மேற்கண்ட அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையம் மற்றும் நலவாழ்வு மையத்தின் மூலம் மொத்தம் 19623 உள் நோயாளிகள், 919306 வெளிநோயாளிகள் சிகிச்சை பெற்று பயனடைந்தனர், மேலும் 19 தாய்மார்களுக்கு மகப்பேறு நடைபெற்று பிரசவம் ஆனது.

## நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்

திருப்பூர் மாநகராட்சியில் 2025–2026 நிதியாண்டில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ், 4 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது, அவற்றின் மூலம் மொத்தம் 5242 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

## மக்களைத் தேடி மருத்துவம்

செப்டம்பர் 15 2021 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது, வயதானவர்களின் இல்லத்திற்கே சென்று மருந்து மாத்திரைகள் மற்றும் இயன்முறை மருத்துவம் வழங்கப்படுவதால் மக்கள் மிகவும் பயனடைந்து வருகிறார்கள்

## டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித்திட்டம்

டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் மூலம் 2025-2026 நிதியாண்டில் மொத்தம் 7 கோடியே 4 லட்சத்தி 7 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 4 கோடியே 53 லட்சத்தி 56 ஆயிரம் ரூபாய் செலவீனமாக அரசிடமிருந்து பெற்று வழங்கப்பட்டுள்ளது, இதில் மொத்தம் 11148 தாய்மார்கள் பயனடைந்துள்ளனர்.

## புதிய அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம்

திருப்பூர் மாநகராட்சி வார்டு எண் 33 குளத்துப்பாளையத்தில் ரூ. 1 கோடியே 20 லட்சத்தில் புதியதாக அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டு வருகிறது, மேலும் இப்பணியானது நிறைவுற்று பயன்பாட்டிற்கு வரும்பொழுது அப்பகுதி சுற்று வட்டார மக்கள் அனைவரும் மிகவும் பயனடைவர்.

## புற்றுநோய் சிகிச்சைக்கான பிரத்யேகக் கட்டிடம்

இந்த தனித்துவமான அரசு-பொதுமக்கள் பங்களிப்பின் மூலம், திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் (GMCH) புற்றுநோய் சிகிச்சைக்கான பிரத்யேகக் கட்டிடம் உருவாக்கப்பட்டுள்ளது.

இம்மையத்தில் சுமார் ₹25 கோடி மதிப்பிலான அதிநவீன லீனியர் ஆக்சிலரேட்டர் (LINAC) கருவி நிறுவப்பட்டுள்ளது. இது துல்லியமான 'எக்ஸ்டர்னல் பீம் ரேடியோதெரபி' (External Beam Radiotherapy) சிகிச்சையை வழங்குகிறது. மேலும், சுமார் ₹5 கோடி மதிப்பிலான 'பிரக்கிதெரபி'

(Brachytherapy) சிகிச்சை பிரிவும் இங்கு உள்ளது. இது கர்ப்பப்பை வாய், மகப்பேறு சார் புற்றுநோய்கள், புரோஸ்டேட் மற்றும் சில வகையான மார்பகப் புற்றுநோய்களுக்கான சிகிச்சையில் மிக அவசியமானதாகும். இந்த வசதிகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதன் மூலம், மாவட்டத்திலேயே விரிவான கதிர்வீச்சு புற்றுநோயியல் (Radiation Oncology) சேவைகள் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை இத்திட்டம் ஒரு முக்கிய மைல்கல்லாகும். ஏனெனில், இது அரசுத் துறையிலேயே மேம்பட்ட புற்றுநோய் சிகிச்சையைக் கொண்டு வந்துள்ளது. இது குறிப்பாகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய நோயாளிகளுக்கு நேரடியாகப் பயனளிக்கும். இதன் மூலம் நோயாளிகள் தொலைதூரங்களில் உள்ள பெருநகர புற்றுநோய் மையங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியம் குறைகிறது. இதனால் சிகிச்சை தாமதங்கள், தேவையற்ற கூடுதல் செலவுகள் மற்றும் குடும்பத்தினரின் மன உளைச்சல் ஆகியவை கணிசமாகக் குறைக்கப்படுகின்றன.

## நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் பணிகள்

தமிழ்நாடு அரசின் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் கீழ் திருப்பூர் மாநகராட்சி பகுதியில் இயங்கி வரும் 17 அரசு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் கே.வி.ஆர் நகர் மற்றும் நல்லூர் அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட தமிழ்நாடு அரசால் தலா ரூ.120.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு திருப்பூர் மாநகராட்சியால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வீரபாண்டி, நெரிப்பெரிச்சல், அண்ணா நெசவாளர் காலனி ஆகிய அரசு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தலா ரூ.60.00 இலட்சம்

நிதியில் கூடுதல் கட்டிடம் தமிழ்நாடு அரசின் நிதி பெற்று நமது மாநகராட்சியால் கட்டப்பட்டு வருகிறது.

மேற்கண்ட அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையம் மற்றும் நல வாழ்வு மையத்தின் மூலம் மொத்தம் 19623 உள் நோயாளிகள், 9,19,306 வெளிநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு பயனடைந்துள்ளனர்.

திருப்பூர் மாநகராட்சி நான்கு மண்டல பகுதிகளில் அமைந்துள்ள 17 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 87 துணை சுகாதார நிலையங்கள், 35 நலவாழ்வு மையங்கள், 1 பரிசோதனை நிலையம் மற்றும் மாநகராட்சி மருந்தகத்திற்கு குள்ளம்பாளையம் பகுதிகளில் உள்ள அரசு மருந்து கிடங்கில் இருந்து மருந்துகள் மற்றும் மருத்துவம் சார்ந்த பொருட்களை பெற்று மேற்படி மையங்களுக்கு விநியோகம் செய்யும் பணிகளை மேற்கொள்ள



தற்காலிகமாக இரண்டு டெம்போ டிராவலர் வாகனம் மாத வாடகை அடிப்படையில் (வாகனம், எரிபொருள் மற்றும் ஓட்டுநர் உட்பட) தனியார் நிறுவனத்தின் மூலம் கடந்த ஆகஸ்ட் 2023 ஆம் மாதம் முதல் மேற்படி மருத்துவ பணிக்கு பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டு 2023-2024ம் ஆண்டிற்கு ரூ.12.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 2024-25ஆம் ஆண்டுக்கு ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையம் மற்றும் நலவாழ்வு மையத்தின் மூலம் மொத்தம் 19623 உள் நோயாளிகள், 919306 வெளிநோயாளிகள் சிகிச்சை பெற்று பயனடைந்தனர், மேலும் 19 தாய்மார்களுக்கு மகப்பேறு நடைபெற்று பிரசவம் ஆனது.

## தூய்மைப் பணியாளர்களின் சமூக நலனை மேம்படுத்துதல்

தேசிய தூய்மை பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் (NSKFDC) சுவச்டா உதயமி யோஜனா (Swachhta Udyami Yojana–(SUY) ) திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்களின் சமூக பொருளாதார நலனை மேம்படுத்தும் பொருட்டு அவர்களுக்கு வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களை மேற்கொள்ள சலுகை வட்டி விகிதத்தில் (Concessional Rates of Interest) வேலைவாய்ப்புடன் கூடிய தொழில் செய்வதற்கு தேவையான நிதி உதவி மற்றும் அதற்கு தொடர்புடைய திறன் மேம்பாட்டு பயிற்சியினை வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் SBM 2.0 சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் : எச்1/7828/2022 நாள் : 07.03.2023ல் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் இம்மாநகராட்சியின் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் மத்திய அரசின் மானியம் மற்றும் NSKFDC உடன் வங்கியில் நீண்ட கால கடனுதவியுடன் ஒரு வாகனத்திற்கு உத்தேசமாக ரூ.46 இலட்சம் மதிப்பீட்டில் 6 எண்ணிக்கையில் கழிவு நீர் அகற்றும் வாகனம் கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டு அதனை மேற்படி பயனர்களின் பெயரில் கொள்முதல் செய்து நீண்ட கால வாடகை / ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்துவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரங்கள்



மற்றும் சமூக நிலை மேம்படுத்தப்படுகிறது. மேற்படி பணிக்கு 2025-2026 ஆம் நிதியாண்டில் 5 வாகனங்களுக்கு மாத வாடகையாக ரூ. 80 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி வாகனங்களை தூய்மை பணியாளர்களினை நலனை மேம்படுத்தும் வகையில் இம்மாநகராட்சி பணிக்கு மாத வாடகை அடிப்படையல் பயன்படுத்த 2026-27 ஆம் நிதியன்டில் ரூ. 220 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**திடக்கழிவு மேலாண்மை – குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கான ஊக்கத்தொகைத் திட்டம்**

திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 1 முதல் 4 வரையுள்ள பகுதிகளில்




திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்தும் பொருட்டு, மாநகராட்சியில் பதிவு செய்யப்பட்ட குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு ரூ.5,000/- வரை ஊக்கத்தொகை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொகையானது, வீடுகளிலேயே குப்பைகளைத் தரம் பிரித்தல், இரண்டு குப்பைத் தொட்டி முறையைப் பின்பற்றுதல் மற்றும் கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக வழங்கப்படுகிறது.

## பொது நிதி

## வரவினம் மற்றும் செலவினச் சுருக்கம்

| கணக்குத் தலைப்பு | குறியீடு | உள்ளபடி வரவு (ம) செலவு 2024–25 | திட்ட மதிப்பீடு 2025–26 | திருத்திய மதிப்பீடு 2025–26 | திட்ட மதிப்பீடு 2026–27 |
|---|---|---|---|---|---|
| **வருவாய் வரவினம்** | | | | ரூபாய் இலட்சத்தில் | |
| வருவாய் வரியினங்கள் | 110 | 10,029.13 | 11,889.54 | 10,974.53 | 12,620.67 |
| ஒப்படைக்கப்பட்ட வருவாய் | 120 | 1,347.97 | 1,180.00 | 2,000.89 | 2,150.00 |
| மாநகராட்சி சொத்துக்களின் மூலம் கிடைக்கும் வருமானம் | 130 | 3,016.37 | 4,304.20 | 3,747.99 | 4,681.34 |
| சேவை கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் | 140 | 4,593.50 | 5,504.50 | 5,926.10 | 7,129.80 |
| உற்பத்தி பொருள் விற்பனை | 150 | 252.58 | 225.00 | 251.32 | 230.00 |
| வருவாய் மானியம் மற்றும் சகாயத் தொகை | 160 | 12,688.96 | 12,245.54 | 14,144.90 | 14,432.03 |
| முதலீடுகள் மீதான வருவாய் | 170 | 252.93 | 170.90 | 200.95 | 165.90 |
| வங்கி கணக்கு மீதான வட்டி மூலம் வருவாய் | 171 | 794.03 | 300.00 | 350.25 | 500.00 |
| பிற வருவாய் | 180 | 1,520.30 | 1,070.00 | 1,014.06 | 1,602.50 |
| முந்தைய ஆண்டு வரவினம் | 280 | 1,230.58 | 2,350.00 | 1,250.00 | 1,300.00 |
| மொத்தம் | | **35,726.35** | **39,239.68** | **39,860.99** | **44,812.24** |
| **மூலதன வரவினம்** | | | | | |
| மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 320 | 23,746.21 | 52,183.10 | 18,111.79 | 42,659.90 |
| **மொத்தம்** | | **23,746.21** | **52,183.10** | **18,111.79** | **42,659.90** |
| **மொத்த வரவினம்** | | **59,472.56** | **91,422.78** | **57,972.78** | **87,472.14** |
| **வருவாய் செலவினம்** | | | | | |
| பணியமைப்புச்செலவுகள் | 210 | 8,439.05 | 9,414.50 | 9,782.85 | 11,083.00 |
| நிர்வாகச் செலவுகள் | 220 | 712.53 | 1,142.52 | 877.32 | 1,349.75 |
| இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 230 | 12,559.83 | 19,180.10 | 14,840.85 | 20,102.06 |
| நிதிச் செலவுகள் | 240 | 34.50 | 25.20 | 32.05 | 31.95 |
| திட்டச் செலவுகள் | 250 | 50.01 | 120.00 | 14.35 | 230.00 |
| மானியம் மற்றும் சகாயத் தொகை | 260 | 1,069.46 | 3,878.35 | 829.69 | 8,174.00 |
| முந்தைய ஆண்டு செலவினம் | | 226.39 | 400.00 | 6.77 | 200.00 |
| மொத்தம் | | **23,091.77** | **34,160.67** | **26,383.88** | **41,170.76** |
| **மூலதன செலவினம்** | | | | | |
| நிலையான சொத்துக்கள் | 330 | 27,587.20 | 52,218.00 | 24,963.17 | 43,637.00 |
| கடன்கள் திரும்ப செலுத்துதல் | 410 | 1,445.01 | 239.64 | 304.22 | 40.82 |
| **மொத்தம்** | | **29,032.21** | **52,457.64** | **25,267.39** | **43,677.82** |
| **மொத்த செலவினம்** | | **52,123.98** | **86,618.31** | **51,651.27** | **84,848.58** |
| **உபரி** | | **7,348.58** | **4,804.47** | **6,321.51** | **2,623.56** |

## வருவாய் நிதி - வரவினம்

ரூ லட்சத்தில்




## வருவாய் நிதி - செலவினம்

ரூ லட்சத்தில்



# பொது நிதி

## வருவாய் வரவினம்

| கணக்கு எண் | கணக்குத் தலைப்பு | உள்ளபடி வரவு | திட்ட மதிப்பீடு | திருத்திய மதிப்பீடு | திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| | | 2024–25 | 2025–26 | 2025–26 | 2026–27 |
| வருவாய் வரியினங்கள் | | | | | |
| 91–110–01–01 | சொத்துவரி – குடியிருப்பு | 32,27,67,925 | 37,15,78,800 | 35,25,45,579 | 40,54,27,000 |
| 91–110–01–03 | சொத்துவரி – நிறுவனங்கள் | 21,51,23,893 | 24,58,95,300 | 21,07,25,270 | 24,23,34,000 |
| 91–110–01–02 | சொத்துவரி – வணிகம் | 20,43,36,205 | 21,43,33,550 | 24,38,02,411 | 28,03,72,000 |
| 91–110–01–04 | சொத்து வரி – காலியிடம் | 2,68,46,749 | 3,04,70,400 | 2,73,08,299 | 3,14,04,000 |
| 94–110–10–01 | தொழில் வரி | 5,29,25,904 | 5,97,79,300 | 5,50,23,000 | 6,32,76,000 |
| 91–431–10–06 | சொத்துவரி – குடியிருப்பு – நிலுவை – வசூலிக்கத்தக்கது | 4,95,33,215 | 9,04,49,000 | 5,69,63,197 | 6,55,07,000 |
| 91–431–10–08 | சொத்துவரி – நிறுவனங்கள் – நிலுவை – வசூலிக்கத்தக்கது | 1,28,61,360 | 3,13,74,000 | 1,47,90,564 | 1,70,09,000 |
| 91–431–10–07 | சொத்துவரி – வணிகம் – நிலுவை – வசூலிக்கத்தக்கது | 2,69,26,307 | 4,23,44,000 | 3,09,65,253 | 3,56,10,000 |
| 91–431–10–09 | சொத்து வரி – காலியிடம் – நிலுவை – வசூலிக்கத்தக்கது | 5,50,10,154 | 5,88,21,000 | 6,32,61,677 | 7,27,50,000 |
| 94–431–19–04 | தொழில் வரி – நிலுவை – வசூலிக்கத்தக்கது | 3,65,80,932 | 4,39,09,000 | 4,20,68,072 | 4,83,78,000 |
| | **மொத்தம் (1)** | **1,00,29,12,644** | **1,18,89,54,350** | **1,09,74,53,322** | **1,26,20,67,000** |
| ஒப்படைக்கப்பட்ட வருவாய் | | | | | |
| 98–120–10–01 | சொத்து மாற்றங்களுக்குரிய வரி | 12,40,92,968 | 10,00,00,000 | 19,05,69,245 | 20,00,00,000 |
| 98–120–10–02 | கேளிக்கை வரி | 1,07,04,053 | 1,80,00,000 | 95,20,000 | 1,50,00,000 |
| | **மொத்தம் (2)** | **13,47,97,021** | **11,80,00,000** | **20,00,89,245** | **21,50,00,000** |
| மாநகராட்சி சொத்துக்களின் மூலம் கிடைக்கும் வருவாய் | | | | | |
| 06–130–20–01 | கட்டிட வாடகை | 23,38,205 | 13,68,000 | 24,55,115 | 25,77,000 |
| 06–130–40–01 | நிலவாடகை மற்றும் குத்தகை | 21,93,742 | 18,00,000 | 10,26,000 | 10,77,000 |
| 06–431–40–02 | நிலவாடகை மற்றும் குத்தகை – நிலுவை – வசூலிக்கத்தக்கது | 1,67,57,101 | 3,40,52,000 | 1,75,94,956 | 1,84,74,000 |
| 42–130–10–06 | பேருந்து நிலைய நுழைவு கட்டணம் | 39,60,276 | 32,78,000 | 26,48,029 | 27,80,000 |
| 42–130–80–05 | நவீன கட்டணக் கழிப்பிடம் | 71,30,847 | 32,16,000 | 70,47,864 | 74,00,000 |
| 55–130–10–02 | சமுதாயக்கூடம் வாடகை | 1,70,323 | 85,000 | 1,78,839 | 1,87,000 |
| 58–130–10–01 | வணிக வளாக வாடகை | 6,00,49,520 | 8,00,54,000 | 6,30,51,996 | 6,62,04,000 |
| 58–130–10–03 | தினசரி சந்தைக் கட்டணம் | 2,63,55,129 | 2,76,73,000 | 2,76,72,885 | 7,10,00,000 |
| 58–130–10–04 | வாரச் சந்தைக் கட்டணம் | 3,33,87,065 | 1,73,38,000 | 2,56,53,800 | 2,69,36,000 |
| 58–431–40–06 | வணிக வளாக வாடகை – நிலுவை – வசூலிக்கத்தக்கது | 12,38,04,624 | 15,25,60,000 | 12,99,94,855 | 13,64,94,000 |
| 61–130–80–03 | தோட்டம் / பூங்கா வரவுகள் | 1,07,27,685 | 1,11,98,000 | 1,04,74,230 | 1,19,36,000 |
| 83–130–10–07 | வாகன நிறுத்துமிட கட்டணம் | 1,40,00,105 | 1,47,00,000 | 1,47,00,110 | 4,84,35,000 |
| 83–431–40–14 | பேருந்துநிலையக் கட்டணம் – நிலுவை – வசூலிக்கத்தக்கது | 4,85,331 | 5,98,000 | 5,09,598 | 5,10,000 |

| கணக்கு எண் | கணக்குத் தலைப்பு | உள்ளபடி வரவு | திட்ட மதிப்பீடு | திருத்திய மதிப்பீடு | திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| | | 2024–25 | 2025–26 | 2025–26 | 2026–27 |
| 81–130–80–13 | சூரியஒளி மின்திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் | – | 8,25,00,000 | 7,00,80,318 | 7,25,00,000 |
| 58–431–40–04 | கட்டிட வாடகை நிலுவை – வசூலிக்கத்தக்குத | 2,77,312 | – | 17,10,060 | 16,24,000 |
| | **மொத்தம் (3)** | **30,16,37,265** | **43,04,20,000** | **37,47,98,655** | **46,81,34,000** |
| **சேவை கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள்** | | | | | |
| 02–140–10–01 | ஒப்பந்ததாரர் / கட்டிட வரைவாளர் / பொருள் விநியோகிப்போர் உரிமம் பதிவு கட்டணம் | 3,90,000 | 4,00,000 | 5,60,000 | 6,00,000 |
| 02–140–13–02 | பிறப்பு இறப்பு சான்றிதழ் கட்டணம் | 1,32,901 | 1,50,000 | 1,20,500 | 1,50,000 |
| 02–140–20–01 | காசாக்கப்படாத காசோலை தண்டனை வரவு | 12,777 | 50,000 | 22,853 | 25,000 |
| 02–140–14–02 | மனை வரன்முறை கட்டணம் | 8,05,58,220 | 8,00,00,000 | 7,20,00,000 | 10,00,00,000 |
| 02–140–14–03 | அபிவிருத்திக் கட்டணம் (கட்டிடம்) | 27,47,430 | 1,00,00,000 | 25,53,000 | 1,00,00,000 |
| 21–140–70–01 | வெட்டிய சாலை சீரமைப்பு கட்டணம் | 1,38,14,986 | 1,50,00,000 | 8,34,00,000 | 10,00,00,000 |
| 30–140–11–01 | தொழில் உரிமக் கட்டணம் | 94,45,760 | 1,50,00,000 | 1,05,03,000 | 1,30,00,000 |
| 45–140–11–04 | ஆடுவதைக் கட்டணம் | – | 21,00,000 | 21,00,123 | 22,05,000 |
| 02–140–20–04 | இதர தண்டனை கட்டணம் | 5,83,32,874 | 4,20,00,000 | 4,25,00,000 | 4,50,00,000 |
| 12–140–11–03 | கட்டிட உரிமக் கட்டணம் | 10,82,17,125 | 12,00,00,000 | 20,14,03,052 | 23,02,00,000 |
| 11–140–15–02 | கட்டிட இடிபாடு அகற்றும் கட்டணம் | 1,76,65,350 | 2,00,00,000 | 51,600 | 1,20,00,000 |
| 11–140–50–07 | மயான கட்டணம் | 5,22,250 | 5,00,000 | 5,20,000 | 5,50,000 |
| 11–140–50–10 | குப்பை அகற்றுதல் பயன்பாட்டு கட்டணம் | 12,31,39,640 | 12,50,00,000 | 14,06,10,586 | 14,00,00,000 |
| 11–431–30–08 | குப்பை அகற்றுதல் பயன்பாட்டு கட்டணம் நிலுவை | 3,13,89,243 | 11,00,00,000 | 2,86,38,000 | 4,80,00,000 |
| 11–140–50–88 | குப்பை /கழிவுகள் அகற்றுதல் கட்டணம் | 43,600 | 50,000 | 45,000 | 50,000 |
| 03–140–80–03 | இதர பிடித்தங்கள் | 1,28,97,006 | 90,00,000 | 75,00,000 | 1,00,00,000 |
| 02–140–40–04 | ஒப்பந்ததாரர் / கட்டிட வரைவாளர் / பொருள் விநியோகிப்போர் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் | – | 10,00,000 | 40,000 | 10,00,000 |
| 11–140–40–02 | நில அளவைக் கட்டணம் | 40,600 | 1,00,000 | 40,000 | 1,00,000 |
| 11–140–40–01 | விளம்பரக் கட்டணம் | – | 1,00,000 | 2,000 | 1,00,000 |
| | **மொத்தம் (4)** | **45,93,49,762** | **5,04,50,000** | **59,26,09,714** | **71,29,80,000** |
| **விற்பனை மற்றும் வாடகை கட்டணம்** | | | | | |
| 02–150–12–02 | கழிவு பொருள் விற்பனை | 15,32,823 | 50,00,000 | 70,00,000 | 50,00,000 |
| 02–150–40–01 | வாகனங்களுக்கான வாடகை கட்டணம் | 1,83,53,000 | 1,20,00,000 | 1,25,00,000 | 1,20,00,000 |
| 42–150–10–03 | அம்மா உணவகம் | 53,71,741 | 55,00,000 | 56,31,745 | 60,00,000 |
| | **மொத்தம் (5)** | **2,52,57,564** | **2,25,00,000** | **2,51,31,745** | **2,30,00,000** |
| **வருவாய் மானியம் மற்றும் சகாயத் தொகை** | | | | | |

| கணக்கு எண் | கணக்குத் தலைப்பு | உள்ளபடி வரவு | திட்ட மதிப்பீடு | திருத்திய மதிப்பீடு | திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| | | 2024–25 | 2025–26 | 2025–26 | 2026–27 |
| 03–160–10–03 | அரசு மானியம் | 10,43,41,878 | 6,00,00,000 | 7,52,86,696 | 10,40,00,000 |
| 03–160–10–04 | மாநில நிதிக்குழு மானியம் | 1,16,45,54,460 | 1,16,45,54,000 | 1,33,92,02,820 | 1,33,92,02,820 |
| | **மொத்தம் (6)** | **1,26,88,96,338** | **1,22,45,54,000** | **1,41,44,89,516** | **1,44,32,02,820** |
| **முதலீடுகள் மீதான வருவாய்** | | | | | |
| 03–170–10–01 | முதலீடுகள் மீதான வட்டி | 2,52,02,908 | 1,70,00,000 | 2,00,04,500 | 1,65,00,000 |
| 03–170–20–01 | பங்கு | 90,000 | 90,000 | 90,000 | 90,000 |
| | **மொத்தம் (7)** | **2,52,92,908** | **1,70,90,000** | **2,00,94,500** | **1,65,90,000** |
| **வட்டி மூலம் வருவாய்** | | | | | |
